பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 14 | ஞாயிற்றுக்கிழமை | 30.07.2023 | கதிர் 261

# தமிழ்க் கட்சிகளை செவ்வாயன்று சந்திக்கின்றார் இந்தியத் தூதுவர்

## ஜனாதிபதியின் 13 முன்னெடுப்புப் பின்னணியில் சந்திப்புக்கு அழைப்பு

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டம் எந்தவித தீர்மானங்களையும் எடுக்காது முடிவுக்கு வந்த பின்னணியில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேக்கும் இடையில் ஓகஸ்ட் 1 அரசியல் சந்திப்பு இடம் பெறவுள்ளது.

இந்தியத் தூதரகத்தின் அழைப்பின் பேரில் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா.சம்பந்தன் ஊடாக இந்தச் சந்திப்புக்கான அழைப்பு ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது.

செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

தமிழ் கட்சிகளின் சார்பில் இலங்கை தமிழரசு கட்சியின் பெருந்த தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், சாணக்கியன், ☞2

## இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நீதிமன்ற உத்தரவையும் மீறி முறையற்ற வழிகளில் ஒத்திவைத்துள்ள ஜனாதிபதியும் ஆட்சியாளர்களும் அது தொடர்பான வழக்கில் தமக்குப் பாதகமாகத் தீர்ப்பு வந்துவிடுமோ என்கிற பதற்றத்தில் இயங்கி வருகின்றனர் என்பதை இரண்டு தடவைகள் இந்தப் பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டியமை வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

இந்தப் பதற்றத்தின் தொடர்ச்சியாக ஜூலை 18 தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களைச் ஜனாதிபதி சந்தித்துப் பேசினார் என்று கூறப்படுகின்றது. அடுத்த வருடம் நடத்தப்பட இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஆராய்வதற்காகவே இந்தச் சந்திப்பு என்று அவர்கள் அழைக்கப்பட்டிருந்தாலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை ஒத்தி வைத்தமை தொடர்பாக நீதிமன்றில் நிலுவையில் உள்ள வழக்குத் தொடர்பாக ஆராய்வது அல்லது ஆணைக்குழு உறுப்பினர்களிடம் செல்வாக்குச் செலுத்துவதே ஜனாதிபதியின் நோக்கமாக இருந்தது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு புதிய உறுப்பினர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார். ☞2

# யானைகள் தாக்கி நேற்றும் இருவர் சாவு

## இரண்டு நாள்களில் ஐவர் இறப்பு

காட்டு யானைகள் தாக்கி நேற்றும் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். இவர்களுடன் கடந்த இரு நாள்களில் யானைகளால் ஐவர் இறந்திருக்கின்றனர்.

இங்கிண்ணியாகலை - கெஹெல்எல்ல பிரதேசத்தில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

அம்பாறை, பரகஹகலே பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய நபரே இவ்வாறு ☞2

# கடல் அட்டை தருவதாக பண மோசடி மன்னார் முதலாளி மீது சீனர் வழக்கு

(ந.லோகதயாளன்.)

கடலட்டை விற்பனை செய்வதாகக்கூறி முற்பணம் பெற்றுக்கொண்டு மோசடி செய்துவிட்டார் என்று மன்னாரைச் சேர்ந்த அட்டைப் பண்ணை முதலாளி ஒருவர் மீது சீனர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

மன்னார்ப் பொலிஸில் சீனர் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மன்னார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிராளியாக மன்னார், பள்ளிமுனையைச்சேர்ந்தஓர் அட்டைப்பண்ணைமுதலாளி குறிப்பிடப்பட்டுள்ளார். 65 லட்சம் ரூபா பணத்தை மோசடி செய்துவிட்டார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கு 2022 டிசெம்பர் 22 நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டு இரு தவணைகள் அழைக்கப்பட்டுள்ளது. இறுதியாக 2023 ஜூன் 19 அழைக்கப்பட்டது. நீதிமன்றில் எதிராளி சார்பில் முற்பட்ட சட்டத்தரணிகள், சீனரின் வாக்குமூலம் சீன மொழியில் இருப்பதனால் அதன் மொழிபெயர்ப்பு தேவை என்று கேட்டனர். இதையடுத்து வழக்கு ஓகஸ்ட் 4 அழைக்கப்படும் எனத் தவணையிடப்பட்டது.

வடக்கில் இயங்கும் கடல் அட்டைப்பண்ணைகளில் பல சீனர்களின் இரகசிய முதலீடுகளில்தான் இயங்குவதாக வடக்கின் மீனவ சங்கங்கள் பல நீண்டகாலமாக குற்றம் சாட்டி வந்த நிலையில் ஓர் முகவரின் ஊடாக ☞2

# இந்தியாவின் ஒரு பகுதியாக வடக்குக், கிழக்கை இணைக்கக் கோரவேண்டிய நிலைமை ஏற்படும்

## செல்வம் எம்.பி. எச்சரிக்கை

தமிழர்களுக்கான தீர்வு கிடைக்கவில்லை என்றால் வடக்கு கிழக்கை இந்தியாவின் ஒரு பகுதியாக இணைக்க வேண்டும் என கோரவேண்டும் என செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அதன் மூலமே தமிழர்களின் இறையான்மையைப் பாதுகாக்க முடியும் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

சிங்களவர்கள் தமிழர்களின் இரத்தத்தைக் குடிக்கும் நோக்குடன் மட்டுமே செயற்படுகின்றனர் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

நாட்டை வலுப்பெறச் செய்ய வேண்டும் என்பதை சிந்திக்காது, தமிழர்களை எவ்வாறு முடக்குவது என்றுதான் அரச தலைவர் கள் சிந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள் எனக் குறிப்பிட்டார்.

பலவேறுமைகள் இருந்தாலும் எமது மக்களுக்காக நாம் ஒற்றுமைப் பட வேண்டும் என்றும் இந்த ஒற்றுமை புலம்பெயர் தேசத்து கட்டமைப்புகளும் ஒன்றுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

உதட்டளவில் ☞2

# குஞ்சுகுளத்தில் இளைஞன் இடியனால் சுட்டுக்கொலை



குஞ்சுக்குளம் பகுதியில் சூட்டுக்காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலத்தை ஓமந்தை பொலிசார் மீட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டம் ஓமந்தையில் உள்ளது குஞ்சுக்குளம். அங்குள்ள வீட்டு வாயிலின் முன்பாக கைகள், கால்களை அகலப் பரப்பியபடி வீழ்ந்து கிடந்த நிலையில் கண்டெடுக்கப்பட்ட சடலம், ஓமந்தை, வேப்பங்குளத்தைச் சேர்ந்த ச.டிசாந்த் (வயது 21) என்பவருடையது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

குஞ்சுக்குளம் பகுதியில் தோட்டசெய்கையில் ஈடுபட்டு வந்த அவர் அங்கு சென்று வரும் வழியில் இடியன் துப்பாக்கியால் சுடப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித் ☞2

# தையிட்டி சட்டவிரோத விகாரை குறித்து விரைவில் சுமூக தீர்வாம்



தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையைச் சுற்றியுள்ள தனியார் காணிகளை விடுவிப்பது தொடர்பில் சாதகமான முடிவு எட்டப்பட்டிருப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா தெரிவித்தார்.

தையிட்டி விகாரையின் விகாரதிபதி ஜின்தோட்ட நந்தாராமவை நேரில் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

'திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ள பகுதியில் காணப்படும் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகள் தொடர்பாகவும், பாதிக்கப்பட்ட மக்களின் எதிர் ☞2

# இந்தியாவின் மாநிலமாக இலங்கையை மாற்றும் முயற்சியே பாலம் அமைப்பு

## கடுமையாக எதிர்க்கிறார் பேரா. ஆனந்த ஜயவிக்ரம

இந்தியாவின் மாநிலமாக இலங்கையை மாற்ற முயற்சிக்கின்றனர். பாலத்தை நிர்மாணிப்பதால் இந்தியாவின் நலன்களே நிறைவேறும். இலங்கையின் தேவைகள் நிறைவேறாது.

இவ்வாறு தெரிவித்தார் பேராதனை பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின் புத்திஜீவிகள் ஒன்றியத்தின் தலைவருமான பேராசிரியர் ஆனந்த ஜயவிக்ரம. கடந்த வாரம் இந்தியப் பிரதமர் மோடிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நடந்த பேச்சில் இரு நாடுகளுக்கும் இடையிலான நிலத் தொடர்புகளை ஏற்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. இதற்கென ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. இது குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைதக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் தேவைப்பாட்டுக்காகவன்றி, இந்தியாவின் தேவைப் பாட்டுக்கு ஏற்பவே இந்த பால நிர்மாண விடயம் கையாளப்படுகிறது. இதனால் இலங்கையின் நலன்களைவிட இந்தியாவின் நலன்களே மேலோங்கும்.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 6.7 வீதமானோர் தொழிலற்று இருக்கின்றனர். நாளாந்தம் வேலைவாய்ப்பை இழக்கும் தொகை அதிகரித்து வருகிறது.

2022 இறுதியில் 5.5 மில்லியன் ☞2

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் - ஜனாதிபதி சந்திப்பு

## ஊழியர்கள் பற்றாக்குறை தொடர்பில் ஆராய்வு

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தனர்.

இதுவரையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு சுமார் 11,000 முறைப்பாடுகள் பொது மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பணியாளர்கள் தட்டுப்பாடு காணப்படுவதாகவும் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தப்பட்டது. அதற்குரிய தீர்வை விரைவில் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இதன்போது, அரச அதிகாரிகள் மற்றும் பொலிஸாருக்கு அவசியமான வழிக்காட்டல் கோவை ஒன்றை விரைவில் பெற்றுத்தருமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி, அதனூடாக ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த முடியும் என்ற யோசனையையும் முன்வைத்தார்..

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எல்.டீ.பி.தெஹிதெனிய மற்றும் ஏனைய உறுப்பினர்களான பேராசிரியர் தையமுத்து தனராஜ், பேராசிரியர் பாதிமா பர்ஸானா ஹனீபா மற்றும் நிமலசேன கார்திய புந்திஹேவா உள்ளிட்டவர்களும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# வரலாற்றிலேயே முதல் தடவையாக இலங்கை வந்தார் பிரான்ஸ் அதிபர்

## 75 ஆண்டுகால உறவுகளை மேம்படுத்தப் பேச்சு



பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன்

தனது தென் பசுபிக் பிராந்தியத்திற்கான பயணத்தின் பின்னர் நேற்று இலங்கைக்கு வரலாற்று சிறப்புமிக்க பயணத்தை மேற்கொண்டிருந்தார். பிரான்ஸ் ஜனாதிபதியொருவர் இந்நாட்டுக்கு வருகை தருவது இதுவே முதல் தடவையாகும்.

இந்தப்பயணத்தின்போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் ஆகியோர் கொழும்பில் சிநேகபூர்வ மற்றும் சாதக ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஏற்கனவேஇருந்தஆணைக் குழுவினர் ஜனாதிபதிக்குச் சார்பான - சாதகமான - முடிவுகளை எடுக்கவில்லை என்பதால் அவர்களுடன் முரண்பட்டிருந்தார் ஜனாதிபதி. இதையொட்டி ஆணைக்குழுவின்தலைவர் முறையாக ஆணைக்குழுக் கூட்டங்களைக் கூட்டித் தீர்மானங்களை எடுத்தாரா என்பது குறித்து ஆராய்வதற்காக நாடாளுமன்றக்குழு ஒன்றும் நயமிக்கப்பட்டுள்ளது. இப்படிப் பட்ட மிரட்டல்களுக்கு மத்தியிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் தொடர்பில் முன்னைய ஆணைக் குழுவின்முடிவுகளில்இருந்து புதிய ஆணைக்குழு உறுப்பினர்கள் பெரிதும் வேறுபாடு கொண்டிருக்கவில்லை.

இதனாலேயே அவர்களை அழைத்து அவர்களின் முடிவுகளில் செல்வாக்குச் செலுத்துவதற்கு முயன்றுள்ளார் ஜனாதிபதி என்று கூறப்படுகின்றது. இதன் பின்னர் ஜனாதிபதியின் செயலாளருடன் ஆணைக் குழு உறுப்பினர்கள் சந்தித்துள்ளனர். அப்போது மேலதிக சொலிசிஸ்டர் ஜெனரலும் உடனிருந்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் தொடர்பான வழக்கில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் சார்பில் சட்டவாளர் சாலிய பீரிஸே நீதிமன்றத்தில் முற்பட்டு வாதாடுகின்றார். இது குறித்து முன்னரும் ஜனாதிபதி கடுமையான விமர்சனங்களைப் பகிரங்கமாக முன்வைத்த நிலையில். தற்போது சட்ட மா அதிபர் திணைக்களமே ஆணைக்குழுவின் சார்பில் நீதிமன்றத்தில்அந்தவழக்கை முன்னெடுக்க முடியும் என்று ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பிரியந்த நாவன்ன தெரிவித்துள்ளனர். ஆனால், ஆணைக்குழுவின் அந்த முடிவுக்குசாதகமானபதிலைத் தெரிவிக்கவில்லை.

தேர்தலை நடத்துவது என்ற ஆணைக்குழுவின் முடிவுக்கு ஆதரவாக சட்ட மா அதிபர் திணைக்களம் நீதிமன்றில்முற்படும்என்றால் எந்தப் பிரச்சினையும் இருக்காது என்ற வகையில் ஆணைக்குழுவினர்தெரிவித்துள்ளனர்.

ஆக மொத்தத்தில் நீதிமன்றத் தீர்ப்பு வருவதற்கு முன்னதாக உள்ளூராட்சித் தேர்தலைஎப்படியாவதுநிறுத்திவிடுவதற்குஆட்சியாளர்கள் தலைகீழாக நிற்கின்றார்கள் என்பது மட்டும் நன்கு தெரிகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழ்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலையரசன் ஆகியோரும் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம் விநோகராதலிங்கம், புளொட் தலைவர் சித்தார்த்தன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இந்த அழைப்பு அனுப்பப்பட்டதா என்பதை உறுதிப்படுத்தமுடியவில்லை.

கடந்த வாரம் இந்தியா சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை இலங்கை முழுமையாக நடைமுறைப் படுத்தும் என்று தாம் எதிர்பார்க்கின்றார் என்று இந்தியப் பிரதமர் மோடி வலியுறுத்தியிருந்தார்.

நாடு திரும்பியவுடன் அனைத்துக்கட்சிக்கூட்டத்தை கூட்டியரணில்விக்கிரமசிங்க, மாகாணங்களுக்குஅதிகாரங்களைத் திரும்பத் தரமுடியும் என்றாலும் உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்தமுடியாது என்றார். இரண்டில் ஒன்றைத் தான் கேட்க முடியாது என்றார். இதனால் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினர்எம்.ஏ.சுமந்திரனுக்கும் அவருக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து பேச்சை இடைநடுவில் முறித்துக் கொண்டு எழுந்து சென்றிருந்தார் ஜனாதிபதி.

இந்தப்பின்னணியிலேயே தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இந்தியத் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டுளது.

## கடல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடல்அட்டைப்பண்ணைக்கு பணம் வழங்கினோம் அந்தப் பணத்தை மோசடி செய்து விட்டனர் என சீனர் ஒருவரே நேரடியாக வழக்குத் தாக்கல் செய்துள்ள சம்பவம் முதல்தடவையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

## இந்தியாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியம் பேசாமப் அனைவரையும் ஒன்றிணைக்கின்ற செய்றபாட்டை தமிழீழ விடுதலை இயக்கம் செய்யும் என்றும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (05)

## குஞ்சுகுளத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனர். அவர் பயணித்ததாகக் கருதப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் அருகிலேயே வீழ்ந்து கிடந்ததாகவும் பொலிஸார் தெரிவித் தனர். .

இன்று காலை தமது காணிக்குஅருகில்உயிரிழந்த இளைஞன் ஒருவனின் சடலம் கிடப்பதைப் பார்த்து அயலவர்கள் பொலிசாருக்கு தெரியப்படுத்தி யிருந்தனர். அவரது சடலத்திற்கு அருகில் இருந்து இடியன் துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் அண்மைக் காலமாக இடியன் துப்பாக்கி எனப்படும் உள்ளூரிலேயே தயாரிக்கப்பட்ட துப்பாக்கியால் சுடப்பட்டு உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகி வருகின்றது. அண்மையில் நெடுங்கேணியிலும் ஒருவர் இடியனால்சுடப்பட்டுகொல்லப் பட்டார். காட்டுவிலங்குகளை வேட்டையாடுவதற்காக இந்தத் துப்பாக்கிகளை சட்டவிரோதமாக உள்ளூரிலேயே தயாரிக்கிறார்கள். (100)

## தையிட்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்ப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பாகவும் ஏற்க -னவே ஜனாதிபதியுடன் கலந்துரையாடி இருக்கின்றேன்.

அதன் தொடர்ச்சியாக விகாராதிபதியைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளேன். விகாரை அமைந்துள்ள பகுதியில் உள்ள தனியார் காணிகளை விடுவிப்பது தொடர்பாகச் சாதகமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ள நிலையில், மாவட்ட கட்டளைத் தளபதி பிரதேச செயலாளர் மற்றும் நில அளவையாளர் ஆகியோருடன் தொலைபேசி ஊடாக கலந்துரையாடிமேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசிக்கப் பட்டுள்ளது.விரைவில்தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.' என்று தெரிவித்தார்.

அண்மையில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவை சந்தித்த விகாரை அமைக்கப் பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்கள், தமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு பரிகாரம் காணப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடுத்திருந்தனர்.

## பேரா. ஆனந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் புதிதாக வறுமைக் குட்பட்டுள்ளனர். இது 27.4 வீதமாக அதிகரிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

பொருளாதாரம் சரியான நிலைப்பாட்டுக்கு இன்னும் வரவில்லை. ஜனாதிபதி இதற்குண்டான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதாக புலப்படவில்லை.

அஸ்வெசும பெறச் சென்று உயிரிழக்கின்றனர். ஜீவனோபாயத்தை நடத்த தேவையான ஒழுங்கில் பொருளாதார வளர்ச்சி நாட்டில் நடைபெறுவதாக இல்லை. அதிகாரத்தை பெறும்நோக்கிலான பொறுப்பற்ற விதமாக அரசியல் விளையாட்டிலேயே தற்போதையஜனாதிபதியுடன் இந்த ஆட்சியும் மொட்டுக் கட்சியும் ஈடுபட்டுள்ளன.

பொருளாதாரத்துக்கு தீர்வாக அதானி போன்ற சர்வதேசமட்டத்தில்வட்டிக்கு பணம் வழங்குநர்களிடம் தேசியவளங்களைவிற்பதே இந்த அரசாங்கத்தின் கொள்கையாக மாறியுள்ளது.

சர்வதேச நாடுகளின் அதிகாரபோட்டியில்இலங்கை சிக்கியுள்ளது. பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் செயற்பாடுகளுக்குமுற்றிலும் மாறான செயற்பாட்டையே ஜனாதிபதி மேற்கொள்கிறார்.

கல்விச் சீர்திருத்தம் தேவை என்றாலும், கல்விச் சீர்திருத்தம் என்ற போர்வையில் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவைஇல்லாமல் செய்வதற்கு தற்போதைய தேசிய முன்னுரிமை வழங்கப்படுகிறது.

தொடர்ச்சியாகதேர்தலை காலம் தாழ்த்தி, சர்வ கட்சி மாநாட்டை நடத்தி, மக்களையும் சர்வதேச தலைவர்களையும் இந்தியாவையும் ஏமாற்றும் நடவடிக்கையிலேயே ஜனாதிபதி தலைமையிலானஅரசாங்கம் வெட்கமின்றி ஈடுபட்டு வருகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலையேனும் நடத்துமாறு இந்திய பிரதமர் ஜனாதிபதிக்கு தெரிவித்தமை இலங்கையின் நன்மதிப்புக்கே களங்கம் ஏற்படுத்தியுள்ளது.

நாடும் நாட்டு மக்களும் நாமும் எதிர்பார்த்த போக்கில் நாட்டின் பொருளாதார மீட்சி இடம்பெறுவதாக இல்லை. அதற்கான உண்மையானகாரணகாரியசெயற்பாட்டிலான பிர வேசத்துக்கு செல்வதாக இல்லை. பொருளாதார மீட்சிக்கு தேசிய வளங்களை விற்பது தீர்வாகாது; நாடு களுக்கு ஏலம் விடுவதும் தீர்வாகாது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வரலாற்றிலேயே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான இருதரப்பு கலந்துரையாடலில் ஈடுபட்டனர். பிரான்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75ஆவதுஆண்டுநிறைவை முன்னிட்டு இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

சர்வதேசதொடர்புகளில் பிரான்ஸின் ஈடுபாட்டிற்கு பாராட்டுதெரிவித்தஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, காலநிலைப் பேரிடர்களை மட்டுப்படுத்தல், வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு மற்றும் இந்து - பசுபிக் வலய பிரச்சினைகள் தொடர்பில் வழங்கப் படும்ஒத்துழைப்புக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

அண்மையில் பிரான்ஸில்நடைபெற்றபுதிய உலகளாவிய நிதி இணக்கப்பாட்டிற்கான மாநாட்டின் போது ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவுடன் தான் நடத்திய கலந்துரையாடல்தொடர்பில் ஜனாதிபதிமக்ரோன்நினைவுகூர்ந்தார்.

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிப்பதாக அவர் மீண்டும் உறுதிப்படுத்தியிருந்ததோடு, இலங்கையின் நான்காவது பெரியகடன்வழங்குனர்என்ற வகையில்கடன்மறுசீரமைப்பு செயல்முறைக்குதனது ஆதரவைவழங்குவதாகவும் உறுதியளித்தார்.

மேற்படி சந்திப்பின் நிறைவில் தனது உத்தியோகபூர்வடுவிட்டர்பக்கத்தில் பதிவிட்டிருந்த பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன்,

''இலங்கை மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இந்து சமுத்திரத்தின் திறந்த, விரிவானமற்றும்சுபீட்சமான இந்து-பசுபிக்பிராந்தியத்தின் பொதுவான இலக்குகளை பகிர்ந்து கொள்ளும் இரண்டு நாடுகளாகும். நாம் அதனை கொழும்பில்மீண்டும்உறுதிப் படுத்தினோம்: எங்கள் 75 வருடகால இராஜதந்திர உறவுகள்எங்களின்ஒருமைப் பாட்டிற்கான வலுவான இணக்கப்பாட்டினை உறுதிப் படுத்தியுள்ளது.'' என குறிப்பிட்டிருந்தார்.

அரசியல், பொருளாதாரம், சுற்றுலா, காலநிலை மாற்றம், நிலையான வளர்ச்சி மற்றும் கடல்சார் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களுக்கும் இடையேயான கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது. இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கான முக்கிய அம்சங்கள் தொடர்பிலும் அவதானம்செலுத்தப்பட்டது.

கடல்சார் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பிற்கான பாடசாலை ஒன்றை நிறுவுதல், இலங்கையில் அபிவிருத்திக்கான பிரான்ஸ் பணியகம் (AFD) ஒன்றை நிறுவுதல் உயர்மட்ட இராஜதந்திர கலந்துரையாடல்களை ஆரம்பித்தல், கல்வித்துறையில் ஒத்துழைப்பு மற்றும் கடல்வழி ஆள்கடத்தல்செயற்பாடுகளை தடுப்பதற்கான முயற்சிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

மேலும், தற்போதைய உலகளாவிய நகர்வுகள், பிராந்திய மற்றும் பலதரப்பு நலன்கள் குறித்தும் இரு நாட்டுத் தலைவர்களும் கருத்து பரிமாறிக் கொண்டனர். பிரான்ஸ்அங்கம்வகிக்கும் இந்தியப் பெருங்கடல் பிராந்திய சம்மேளனத்தின் (IORA) எதிர்வரும் தலைமைப் பதவிக் காலத்தில் இலங்கையுடன் ஒத்துழைப்புடன் செயற்பட ஆர்வமாக இருப்பதாக பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவித்தார். பிரான்ஸ் பங்கேற்கும் இந்து சமுத்திரசமமேளனத்திற்கான தனது அர்பணிப்பை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் வெளிப்படுத்தினார்.

2023 ஜூன் 22 முதல் 23 வரையில் பிரான்ஸ் ஜனாதிபதியால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாடு சிறப்பானது என்பதை அதனில் பங்கேற்றவர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

நிலையான எதிர்காலத்திற்கான உலகளாவிய முயற்சிகளுக்கு இலங்கையின் அர்ப்பணிப்பை வலியுறுத்தி, பாரிஸ் நிகழ்ச்சி நிரலில் இணைவதற்கான இலங்கையின்இணக்கப்பாடு தொடர்பிலும் இங்கு அறிவிக்கப்பட்டது.

பிரான்ஸின் ஐரோப்பிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் கேத்தரின் கொலோனா, இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரான்ஸ் தூதுவர், ஜீன் பிரானகோசிஸ் பெக்டட் (Jean-Francoise Pactet) பிரான்ஸ் ஜனாதிபதியின் ஆலோசகர்களான பெபியன் மெண்டன்( Fabien Mandon), வலிட் பவூக் (Walid Fouq) மற்றும் ஜோஸ் செரஸ் (Josue Serres) பிரான்ஸ் வெளியுறவு அமைச்சின் ஆசிய வலயத் தலைவர் பெனாய்ட் கைடி, பிரான்ஸ் ஜனாதிபதியின் ஊடக ஆலோசகர் ஜோன்ஸ் பயார்ட், வெளிக்கள வலயங்கள் தொடர்பிலான இராஜாங்க அமைச்சர் பிலிப் விஜீயர், வெளிவிவகார அமைச்சரின் ஆலோசகர் பிலோமியன் கார்டினொக்ஸ் ஆகியோர் பிரான்ஸ் ஜனாதிபதியின் தலைமையில் இருதரப்பு பேச்சுக்களில் கலந்துகொண்டனர்.

வெளிவிகாரஅமைச்சர் அலி சப்ரி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின்பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணிவிஜேவர்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா) ஷோபினி குணசேகர ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையிலான இலங்கைக் குழு சார்பில் கலந்து கொண்டனர்.

## இனவழிப்பு தொடர்பில்

# கனேடியத் தூதுவரிடம் இருந்து இலங்கை பாடம் கற்கவேண்டும்

### மனோ கணேசன் எம்.பி. சுட்டிக்காட்டு




கனடாவில் இனவழிப்பு நிகழ்ந்ததை ஏற்கின்றோம் என்ற அந்நாட்டுத் தூதுவரின் பகிரங்க கூற்றிலிருந்து இலங்கை பாடம் கற்க வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ் ஆகியோர் கலந்துகொண்டு கொழும்பில்வெள்ளிக்கிழமை நடத்திய கனேடியத் தமிழர் பேரவை ஊடகச் சந்திப்பில் கனேடியத்தூதுவர்நிகழ்த்திய உரை தொடர்பிலேயே அவர் இப்படிச் சுட்டிக்கர்டினார்.

இது தொடர்பில் மனோ கணேசன் வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஷ், என் பக்கத்தில் இருந்தபடி பகிரங்கமாக, ''கனடாவில் எங்களின் சொந்த அனுபவம் இருக்கின்றது. ஆதிக்குடிகள் தொடர்பில் கனடாவில் இனவழிப்பு நிகழ்ந்ததை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். ஆதிக் குடிகளுடனான நல்லிணக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. அது தொடர்பில் நாம் பணியாற்றுகிறோம். அது சுலபமல்ல. அது நீண்ட பணி'' என்று கூறினார்.

அதாவது தவறு, குற்றம் நிகழ்ந்ததை, அந்நாட்டு அதிகாரபூர்வ தூதுவர் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளார். இதிலிருந்து இலங்கை கற்க வேண்டிய பாடம் என்ன? வரலாற்றில் தவறுகள், குற்றங்கள் எங்கும் நிகழும். ஆனால் அந்த தவறுகள்,குற்றங்கள்மீண்டும் நிகழாமல் இருக்க, முதலில் நாம் தவறுகள், குற்றங்கள் நிகழ்ந்தன என்பதைப் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மன்னிப்புப் கோருவது என்பதுகூட இரண்டாம் பட்சம்தான் என்பது என் நிலைப்பாடு. ஆனால், முதல் தவறுகள், குற்றங்கள் நிகழ்ந்தனஎன்றஉண்மைஏற்கப்பட வேண்டும். இதுவே இன, மத, நல்லிணக்கத்துக்குஅடிப்படை என்ற பாடத்தை கனடிய தூதுவர் எரிக் வோல்ஷின் கூற்றில் இருந்து இலங்கை அரசியல், மத, சமூகத் தலைவர்கள் கற்க வேண்டும்.

கனேடியத் தூதுவரின் நிலைப்பாடுகள் எனக்குப் புதிதல்ல. அவையே எனது நிலைப்பாடுகளும் ஆகும். தவறுகள், குற்றங்கள் ஆகியவற்றை எல்லா தரப்பும் வரலாற்றில்செய்கின்றன. அரச நிறுவனமும் செய்கின்றது. அரசசார்பற்ற நிறுவனமும் செய்கின்றது. இங்கு யாரும் புனிதர் அல்லர்.

காலம் ஓடுகின்றது. இந்தக் கால ஓட்டத்தில் ஓரிடத்திலேயே தேங்கி தெப்பமாக நிற்க முடியாது. காலம் அனைத்தையும் கடத்தும். இங்கே அனைத்தும் கடந்து போகும். அப்போது புதிய பார்வைகள் தோன்றுகின்றன. புதிய சிந்தனைகள் உதிக்கின்றன. காலம் காட்டும் மாற்றங்களைஏற்காவிட்டால், காலம் எம்மை தூக்கி வீசிவிட்டு போய் கொண்டே இருக்கும். அது யாருக்காகவும் காத்திருக்காது. எனது பார்வை இதுதான்.

நண்பர் எரிக் வோல்ஷ் தொடர்ந்தும் சொன்னார். "பல்லின, பன்மத, பன்மொழி என்ற பன்மைத்துவதை நாம் கொண்டாடுகிறோம்" என்று சொன்னார். "அதுவே எமது பலம்'' என்று சொன்னார். அதையே அவருக்கு முன் பேசும்போது நானும் சொன்னேன். இவற்றை என் சமூக ஊடகதளங்களில் பாருங்கள்.

இலங்கைபன்மைத்துவ நாடுஎன்றஅடிப்படையைநாம் ஒருபோதும் விட்டுக்கொண்டுக்க கூடாது. அதுவே எமது எதிர்கால மீட்சிக்கு ஒரே வழி. எனது வழி. எமது வலியை போக்கும்வழி.- என்றார். (02)

# ஜப்பான் அமைச்சருடன் ரணில் நேரில் சந்திப்பு



இரண்டு நாள் உத்தியோக பூர்வ பயணமாக இலங்கை வந்துள்ள ஜப்பான் அயலுறவுத்துறை அமைச்சர் ஹயாஷி யோஷிமாசா (HAYASHI Yoshimasa) நேற்றுக் கொழும்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை நினைவுகூர்ந்துஇந்தக்கலந்துரையாடல்ஆரம்பிக்கப்பட்டதுடன், பல்வேறு துறைகளில் அந்த உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இரு தரப்பும் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்படுவதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

இலங்கையில் கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டிற்கு ஜப்பான் அரசு வழங்கும் ஆதரவிற்கு இதன்போது நன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கடன் மறுசீரமைப்பு தொடர்பான பொதுவான தளத்தை மேம்படுத்தும் மற்றும் செயல் முறையைவிரைவுபடுத்தும்நோக்கில்பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோனுடன் நடைபெற்ற கலந்துரையாடல் குறித்தும் விளக்கினார்.

மேலும், ஜப்பான்-இலங்கை ஒத்துழைப்பின் முக்கிய விடயமான இலகு ரயில் திட்டம் (LRT), துறைமுக கிழக்கு முனையம், கண்டி அபிவிருத்தித் திட்டம், மத்திய அதிவேக நெடுஞ்சாலை மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய விரிவாக்கத் திட்டங்களை துரிதப்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்துசமுத்திரபிராந்தியத்தைஅமைதியான மற்றும்நிலையானபிராந்தியமாகபேணுவதற்கு ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டதுடன், பிராந்திய மற்றும் பல்வேறு உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங் கவும் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரும் கலந்துரையா டினர்,

தொழில்சந்தைசார்ந்த பொருளாதாரத்தில் இருந்து உயர் தொழில்நுட்ப பொருளாதார மாற்றத்தை எதிர்பார்த் துள்ள இலங்கையின், உயர் தொழில்நுட்ப கைத்தொழில் முதலீட்டு வாய்ப்புகள் குறித் தும் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சருக்கு தெளிவூட்டியதோடு அதற்காக ஜப்பானிய முதலீட்டாளர்களை ஊக்குவிக்க அவசியமான பணிகளை மேற்கொள்வதாக ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

ஜப்பான் அயலுறவுத் துறை அமைச்சர் ஹயாஷியோஷிமாசாவின்சிரேஷ்டஅயலுறவுக் கொள்கை ஒருங்கிணைப்பாளர் முரகாமி மனபு, தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு ஆசிய விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் அரிமா யுடகா, சர்வதேச ஒத்துழைப்பு பணிப்பாளர் நாயகம் எண்டோகசுயா, ஜப்பான் வெளியுறவு அமைச்சின் பிரதி ஊடக செயலாளர் ஒகானோ யுகிகோ மற்றும் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் ஹிடேகி மிசுகோஷி, அமைச்சரின் நிறைவேற்று உதவியாளர் டொமோசபுரோஎசாகி, தென்மேற்கு ஆசியவிவகாரப் பிரிவின் பணிப்பாளர் டாரோ ஷுட்சுமி ஆகியோர் இச்சந்திப் பில் கலந்து கொண்டனர். அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி, தேசிய பாதுகாப்புதொடர்பான ஜனாதிபதியின்சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன உள்ளிட்டோர் இலங்கை தரப்பில் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்

## யானைகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, ஹந்துங்கொட, ஹிம்பிலியாகொட பகுதியில் சைக்கிளில் பயணித்த 69 வயதுடைய நபர் காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை வெவ்வேறு இடங்களில் காட்டு யானைகள் தாக்கி மூவர் சாவடைந்தமை குறிப்பிடத் தக்கது. (02)

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர்
Kalaikkathir

### போதைப் பொருட்களை கட்டுப்படுத்த

# துறைசார் நிறுவனங்கள் அனைத்தையுமே ஒன்றாகக் கூட்டி ஆராய்வதற்கு தீர்மானம்

## நாடாளுமன்ற விசேட குழு ஏற்பாடு

போதைப்பொருள் அச்சுறுத்தலை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழிப்பதற்குமான முதற்கட்டமாக அது தொடர்பான நாட்டின் தற்போதைய நிலைமையைச் சரியாகப் புரிந்துகொள்வது முக்கியமானது என்பதால் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து கலந்துரையாடி, 'நாட்டில் வேகமாகப் பரவிவரும் போதைப்பொருள் அச்சுறுத்தலை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழிப்பதற்கும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து அது பற்றிய அவதானிப்புகளையும் விதப்புரைகளையும் நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கான நாடாளுமன்ற விசேட குழுவில்' தீர்மானிக்கப்பட்டது.

அந்தக் குழுவின் முதலாவது கூட்டம் குழுவின் தலைவர் அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்கமைய, இலங்கை பொலிஸ், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் புகையிலை மற்றும் மதுபானங்கள் தொடர்பான அதிகார சபை ஆகிய நிறுவனங்களை குழு முன்னிலையில் அழைத்து இது தொடர்பில் விரிவான கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டு தற்போதைய நிலைமையைக்கண்டறிவது அவசியமானது என குழுவின் தலைவர் அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார். அதற்கமைய, அந்த நிறுவனங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி குழுவின் முன்னிலையில் அழைப்பதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், போதைப்பொருள் அச்சுறுத்தலை உடனடியாகக் கட்டுப்படுத்து-வதற்கும் ஒழிப்பதற்குமான மூலோபாயத் திட்டம் மற்றும் அது தொடர்பில் செயற்படும் நிறுவனங்களுக்கிடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதன் அவசியம் தொடர்பிலும் இதன்போது வலியுறுத்தப்பட்டது. (05)

# உலக சாரணர் ஜம்போரி அணிக்கு ஜனாதிபதியினால் தேசியக் கொடி

தென்கொரியாவில் நடைபெறவிருக்கும் 25 ஆவது உலக சாரணர் ஜம்போரியில் கலந்துகொள்ளும் இலங்கை அணிக்கு இலங்கையின் பிரதம சாரணரான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் உத்தியோகபூர்வமாக தேசியக்கொடி வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு ஜனாதிபதி அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

தென்கொரியாவில் நடைபெறவிருக்கும் 25 ஆவது உலக சாரணர் ஜம்போரியில் கலந்துகொள்ளும் இலங்கை அணிக்கு வெள்ளி முற்பகல் இலங்கையின் பிரதம சாரணரான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் உத்தியோகபூர்வமாக தேசியக் கொடி ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேசிய சாரணர் ஜம்போரியின் உத்தியோகபூர்வ சின்னமும் இதன்போது வெளியிடப்பட்டது.

25 ஆவது உலக சாரணர் ஜம்போரி 2023 ஓகஸ்ட் 1 முதல் 12 வரை தென் கொரியாவில் நடைபெறவுள்ளதோடு, உலகம் முழுவதிலுமிருந்து 50,000 சாரணியர்கள் இந்நிகழ்வில் பங்கேற்கவுள்ள நிலையில், இலங்கையைப் பிரதிநித்து-வப்படுத்தி, 177 சாரணியர்கள், தலைவர், தலைவியர்களும் பங்குபற்றவுள்ளனர்.



இலங்கை சாரணர் குழுவிற்கு வாழ்த்து தெரிவித்த ஜனாதிபதி, 2048 ஆம் ஆண்டளவில் இலங்கையை தென்கொரியா போன்று அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் எனவும், இந்த பயணத்தின் போது பெற்றுக்கொள்ளும் அனுபவங்களைக் கொண்டு நாட்டின் எதிர்காலத்துக்கு பங்களிப்புச் செய்ய வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

தன்னம்பிக்கை மற்றும் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய வலுவான எதிர்கால சந்ததியைக் கட்டியெழுப்ப சாரணர் இயக்கம் வழங்கும் பங்களிப்பைப் பாராட்டிய ஜனாதிபதி, நாட்டின் எதிர்காலத்துக்காக பெற்றுக் கொண்ட பயிற்சியை திறம்படப் பயன்படுத்துமாறு சாரணியர்களிடம் கேட்டுக்கொண்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த பிரதம சாரணர் ஆணையாளர் சட்டத்தரணி ஜனபிரித் பெர்னாண்டோ, இலங்கையில் சாரணர் இயக்கத்தை விரிவுபடுத்து-வதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வழங்கிய பணிப்புரையின் பிரகாரம், இலங்கையில் சாரணர் இயக்கத்தில் ஒரு லட்சம் உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளும் இலக்கு அண்மையில் எட்டப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை சாரணர் குழுவின் தலைவரும், சர்வதேச ஆணையாளருமான விசேட வைத்திய நிபுணர் ரஜீவ் பீரிஸுக்கு தேசிய கொடி வழங்கி வைக்கப்பட்டதோடு, இலங்கை சாரணர் சங்கத்தின் தலைவர் . ஸ்ரீநாத் குணரத்ன, நிறைவேற்றுக் குழு தலைவர் ரத்னசிறி பெரேரா, உட்பட சங்கத்தின் ஆணையாளர்கள் மற்றும் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார். (05)

# நாட்டில் மனிதாபிமான அவலம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

மக்கள் கடன் சுமையில் சிக்கித் தவிக்கும் நேரத்தில், நாட்டில் ஆட்சி ஒன்றே இல்லை என்ற அளவுக்கு திருட்டு, மோசடி, ஊழல் தலைதூக்கியுள்ளது. மனிதாபிமான அவலம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று நாட்டில் சமூக மற்றும் மனிதாபிமான அவலம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கமொன்று இல்லாதது போலான நிலையில் சுகாதாரத்துறையில் ஊழல், மோசடிகள் அதிகரித்துள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர வர்த்த முயற்சியாண்மைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

மக்கள் கடன் சுமையில் சிக்கித் தவிக்கும் நேரத்தில், ஆட்சியே இல்லை என்ற அளவுக்கு திருட்டு, மோசடி, ஊழல் தலைதூக்கியுள்ளது.

பலவீனமான ஆட்சி நிர்வாகம் ஜனநாயக உரிமைகளை மீறி தேர்தலை ஒத்திவைப்பதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் மக்கள் இருக்கும் அவலநிலையில் இருந்து காப்பாற்ற முடியாவிட்டால் புதிய ஆணைக்கு செல்ல வேண்டும்.



அந்தப் புதிய மக்கள் ஆணைக்குழு புதிய தேசிய கொள்கையின் மூலம் நாட்டின் இலக்குகளை அடைய முடியும்.

எந்த தேர்தலுக்கும் ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது.

மக்களின் கோரிக்கையான தேர்தல் உரிமை வழங்கப்பட வேண்டும்.

மக்கள் இறையாண்மை மற்றும் மக்கள் ஆணை எல்லாவற்றையும்விட முக்கியமானது. அரசாங்கத்தால் நாட்டை கட்டியெழுப்ப முடியாவிட்டால் மக்கள் ஆணைக்கு செல்ல வேண்டும்.

மக்கள் ஆணை எனும் மக்களினது நீதிமன்றத்துக்குச் செல்ல ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருக்கின்றது. என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)



# அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் – ஜனாதிபதி சந்திப்பு



*அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் 2023 , 2024 ஆம் ஆண்டுக்காகத் தெரிவு செய்யப்பட்ட புதிய அதிகாரிகள் குழுவினர் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்தனர். இந்தசந்திப்பின் போது அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் தர்ஷன சிறிசேன, செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே, உப தலைவர்களான வைத்தியர் சந்திக எபிடகடுவ, வைத்தியர் ஹேமந்த ராஜபக் ஷ, வைத்தியர் போதிக்க சமரசேகர, வைத்தியர் எஸ்.மதிவானன் உள்ளிட்ட புதிய அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டனர்.*

*சந்தைப் பெறுமதி மற்றும் செயற்திறனை அடிப்படையாகக் கொண்ட சம்பள கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்தல், புத்திஜீவிகள் வெளியேற்றத்தை மட்டுப்படுத்தல் மற்றும் வைத்தியர்களுக்கான கொடுப்பனவுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு மேற்படி அதிகாரிகளால் விளக்கமளிக்கப்பட்டதோடு, அது தொடர்பிலான பரிந்துரைகளும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.*

*இந்நாட்டின் சுகாதார துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய உடனடி மறுசீரமைப்புக்கள் குறித்து இங்கு தெளிவுபடுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அது தொடர்பாக ஆலோசனைகளை முன்வைக்குமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்திடம் கேட்டுக்கொண்டார்.*

*குறுகிய கால மற்றும் இடைக்கால திட்டங்களின் ஊடாக புதிய மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அத்திட்டங்களை வகுக்கும் போது, ஸ்கெண்டினேவியா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் முன்னேற்றகரமான சுகாதாரக் கட்டமைப்பு தொடர்பில் ஆராய வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (05)*

# பத்திரிகையாளர் தரிந்து மோசமாக தாக்கிக் கைது

இளம்பத்திரிகையாளரும் செயற்பாட்டாளருமான தரிந்து உடுவரகெதர பொலிஸாரால் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார். கைது செய்யப்படும்போது அவர் மிக மோசமாக தாக்கப்பட்டதனால் அவரது கண்களில் காயம் ஏற்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. பொலி–ஸாரே அவரை இப்படி மிக மோசமாகத் தாக்கினர் என்றும் கூறப்படுகின்றது.

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றை கடன் மறுசீரமைப்புக்கு உட்படுத்தியதன் மூலம் அரசு கொள்ளையிட்டுள்ளதாகக் கண்டித்து கொழும்பில் நடந்த ஆர்ப்பாட்டத்தின்போது செய்தி சேகரிப்பதற்காக முச்சக்கரவண்டி ஒன்றினுள் அமர்ந்திருந்தபோதே தரிந்து கைது செய்யப்பட்டுள்ளார். இந்த ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸார் நீர்த்தாரைத் தாக்குதலை மேற்கொண்டனர்.



இதன்போதே தரிந்துவும் கைதுசெய்யப்பட்டு பொரள்ளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். பொலிஸ் நிலையத்திற்குச் சென்று அவரைப் பார்வையிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருனிகா பிரேமச்சந்திர, தரிந்துவின் கண்களில் குருதிப் பெருக்கு இருந்தது என்று குறிப்பிட்டார்.

706648 என்ற பணியிலக்கத்தை கொண்ட பொலிஸ் அலுவலரே அவரைத் தாக்கிக் காயப்படுத்தினார் எனவும் ஹிருணிகா தெரிவித்தார். (05)

# மாணவர் கற்றல் நடவடிக்கைகளில் தொலைபேசிப் பாவனைக்குத் தடை

## ஐ.நா. அறிவிப்பு

மாணவர்களின் கற்றல் நடவடிக்கையின் போது கையடக்கத் தொலைபேசி பயன்பாட்டைத் தவிர்க்க வேண்டும் என ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஸ்மார்ட் தொலைபேசிகளின் திரையை நீண்ட நேரம் பார்ப்பதன் மூலம் குழந்தைகளின் உணர்ச்சி ஸ்திரத்தன்மை முறிவு ஏற்படுவதாக ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பு கூறியுள்ளது.

இந்தக் காரணிகளின் அடிப்படையில் ஸ்மார்ட் தொலைபேசிகளை பாடசாலைகளில் பயன்படுத்து-வதை தவிர்க்க வேண்டும் என்று குறித்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

அதிகநேரம் கையடக்கத் தொலைபேசிகளைப் பார்ப்பது குழந்தைகளின் மனநலத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாக யுனெஸ்கோ சுட்டிக்காட்டுகிறது.

அதன்படி, பாடசாலைகளில் கையடக்கத் தொலைபேசிகளின் பயன்பாட்டைத் தடைசெய்ய வேண்டும் என்று ஐ.நா. வலியுறுத்தியுள்ளது.

மேலும் புதிய விடயங்கள் எப்போதும் சிறந்தவை அல்ல என்றும், கொள்கை வகுப்பாளர்கள் சிந்திக்காமல் கல்வியில் 'டிஜிற்றல் தொழில்நுட்பத்தை' பயன்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் கூறியுள்ளது.

கொவிட்-19 காலப்பகுதியில் ஒன்லைன் தொழில்நுட்பம் மூலம் கற்பிப்பது பயனுள்ளதாக இருந்தாலும், வகுப்பறையில் கற்பிக்கும் முறையால் உருவாகும் குழந்தைக்கும் ஆசிரியருக்கும் இடையிலான நெருங்கிய உறவு ஒரு மாணவருக்கு மிகவும் முக்கியமானது என்று யுனெஸ்கோ கூறுகிறது.

எவ்வாறாயினும், இந்தக் காரணிகளைக் கருத்தில் கொண்டு, கல்வி முறைமைகளில் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்துவதைத் தடைசெய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (05)

# நீர் விரயம் குறைவடைவு

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நீர் விரயம் 40 வீதத்தில் இருந்து 18 வீதமாக குறைவடைந்துள்ளது.

கொழும்பிற்கான நீர் விநியோகக் கட்டமைப்பு புதுப்பிக்கப்பட்டமையின் ஊடாக நீர் விரயம் குறைவடைந்துள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

அந்தத் திட்டத்தின் ஊடாக சேதமடைந்த நீர்க்குழாய்கள் அகற்றப்பட்டு, புதிய நீர்க்குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியுடன் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளர் வசந்தா இலங்கசிங்க தெரிவித்தார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அப்பாவி உயிர்களைக் காக்க அவசர நடவடிக்கை தேவை

யானை – மனித மோதல்களின் விளைவுகள் அதிகரித்துள்ளமையை கடந்த சில நாள்களாக ஏற்படும் உயிரிழப்புக்கள் பட்டவர்த்தனமாகக் காட்டுகின்றன. இரண்டு நாட்களில் மட்டும் ஐந்து பேர் யானைகளின் தாக்குதலில் உயிரிழந்திருக்கிறார்கள். கடும் வறட்சி மற்றும் சிறுபோக அறுவடைக் காலம் என்பன காரணமாக யானைகள் ஊர்களுக்குள்ளும் வயல் நிலங்களுக்குள் புகுவது அதிகரித்திருக்கின்றது. இதனால் இரு தரப்பினருக்கும் இடையிலான மோதல் அப்பாவிகளின் உயிர்களைக் காவு கொள்ளும் எமனாக மாறி இருக்கின்றது. மனிதர்கள் மட்டுமல்ல மனித நடவடிக்கைகள் காரணமாக அண்மைக் காலமாக யானைகள் உயிரிழப்பதும்கூட அதிகரித்துள்ளது.

இந்த நிலமையைக் கட்டுப்படுத்த ஆட்சியாளர்கள் அக்கறை செலுத்துவதாக இல்லை. யானைகளைக் கட்டுப்படுத்த வேலிகள் அமைப்பது உள்ளிட்ட நடவடிக்கைகள் பெரிதும் பயனளிக்கவில்லை என்றாலும் அத்தகைய முயற்சிகளும் இப்போது அடியோடு நிறுத்தப்பட்டிருப்பது மோதல்களைத் தீவிரப்படுத்தியிருக்கின்றது.

யானைகள் காட்டின் பல்லினப் பெருக்கத்திற்கு மிக முக்கியமானவை. யானைகளை தெய்வத்திற்கு மிக நெருக்கமாக வைத்து வணங்கக்கூடிய மக்கள் கூட்டத்தைக் கொண்ட ஒரு நாட்டில் யானைகளின் உயிரிழப்புக்கள் குறித்தும் யானைகளால் ஏற்படும் உயிரிழப்புக்கள் குறித்தும் அக்கறைப்படாமல் இருப்பது மிக மோசமான ஒரு முன்னுதாரணமாக அமைகின்றது. இந்த நிலையைத் தொடர அனுமதிப்பது மேலும் மோசமான விளைவுகளுக்குக் கொண்டு செல்லப் போகின்றது.

ஏற்கனவே தாய்லாந்து நாடு அன்பளிப்பாக வழங்கிய முத்துராஜா யானையை சரிவரக் கவனிக்காமல் விகாரை ஒன்றின் பராமரிப்பில் வழங்கி அதனால் அனைத்துலக மட்டத்தில் அவமானப்பட்டு நிற்கின்றது இலங்கை. முத்துராஜாவை மிக மோசமான கவனிப்புக்கு உட்படுத்தியதால் எழுந்த அழுத்தங்களை அடுத்து அந்த யானையைத் திரும்பப் பெற்றது தாய்லாந்து. சிகிச்சைக்காக என்று தனது சொந்தச் செலவில் யானையை தாய்லாந்துக்கு அழைத்துச் சென்ற அந்நாட்டு ஆட்சியாளர்கள் மீண்டும் யானையைத் திருப்பித் தரப்போவதில்லை என்றும் அதன் மருத்துவச் செலவுகளை தாய்லாந்து அரசர் பொறுப்பேற்றுக்கொண்டார் என்றும் அறிவித்து உலகில் இலங்கையை தலைகுனிய வைத்துள்ளது.

இந்த நிலையில் யானைகள் – மனிதர்கள் மோதலைக் கட்டுப்படுத்தத் தவறி தொடர்ந்தும் இரு தரப்புக்களிலும் உயிரிழப்புக்கள் ஏற்படுவதைத் தடுக்கத் தவறியதன் மூலம் உலக சமூகத்தின் மத்தியில் மீண்டும் அம்பலப்பட்டு நிற்கப்போகின்றது இலங்கை. அதற்கு முன்பாக இந்த விவகாரத்தில் உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு முயற்சிக்கவேண்டும். மிக விரைவிலேயே இதற்கொரு முடிவு கட்டப்படவேண்டும்.

தாய்லாந்து போன்ற நாடுகளிலும் விவசாயம் ஒரு மிக முக்கிய துறையாக இருக்கும் நிலையில் யானைகள் – மனிதர்கள் மோதல்கள் அங்கு எப்படிக் கையாளப்படுகின்றன, உயிரிழப்புக்கள் எப்படித் தவிர்க்கப்படுகின்றன என்பது தொடர்பில் ஆராய்ந்து புதிய முறைகளின் மூலம் இலங்கையிலும் இந்த மோதல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். சகல வசதிகளையும் கொண்ட யானை வைத்தியசாலை ஒன்றை இலங்கைக்கு அமைத்துத்தருவதற்குத் தாய்லாந்து முன்வந்துள்ளதாகச் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. அவ்வாறு உதவும் தாய்லாந்து அரசு, மனிதர்களுடனான யானைகளின் மோதலைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளுக்கும் உதவிகளை வழங்கத் தயங்காது என்று எதிர்பார்க்கலாம். எனவே அதுபோன்ற நாடுகளின் உதவியுடன் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண்பதற்கு அரசு அவசரமாக முன்வரவேண்டும்.

# செப்டெம்பர் மாதத்திலிருந்து நாடு அபிவிருத்தி காணும்

## இப்படிச் சொல்கிறார் முஷாரப் எம்பி.

(வி.ரி.சகாதேவராஜா)

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திலிருந்து நாடு வங்குரோத்து அடையும் என்று எதிராளிகள் சொல்கிறார்கள். ஆனால் செப்டெம்பர் மாதத்தில் இருந்துதான் நாடு பெரும் அபிவிருத்தியை காணவிருக்கின்றது. ஜனாதிபதியை நாங்கள் பூரணமாக நம்புகின்றோம்.

இவ்வாறு, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முாரப் வெள்ளிக்கிழமை காரைதீவில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.எம்.முஷாரப் தலைமையில் காரைதீவு பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் கூட்டம் நடைபெற்றது. காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இக்

கூட்டத்தில், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், உதவிப் பிரதேச செயலாளர் பி. பார்த்தீபன், கணக்காளர் ஜனாபா தெஸ்மியா, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பி.இராஜகுலேந்திரன், திணைக்களங்களின் பிரதிநிதிகள், முப்படைகளின் பிரதிநிதிகள் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். அங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்த்தரப்பினர் கடந்த நாலாம் மாசம் பட்டினிச்சாவு வரும் என்றார்கள். இப்பொழுது செப்டெம்பரில் நாடு வங்குரோத்து அடையும் என்கிறார்கள்.

இவற்றையெல்லாம் எதிர்கொண்டு எமது ஜனாதிபதி இந்த நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பி வருகின்றார். அவர் ஒரு செயல் வீரன். அடுத்த நான்கு வருட காலத்திற்கு நாட்டுக்கு ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையும் கிடைத்திருக்கின்றது. கூடவே 3.5 பில்லியன் டொலர் கிடைக்க இருக்கின்றது.

எனவே நாட்டு மக்கள் அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை. செப்டெம்பர் மாதத்தில் இருந்து அபிவிருத்தி சார் செயற்பாடுகளை நாங்கள் சாதாரணமாக மேற்கொள்ள முடியும். 2024 க்குரிய வரவு செலவுத் திட்டம் மிகவும் சிறப்பாக அமைய இருக்கின்றது. - என்றார்.

# விவசாயிகள் தாமே அமைக்கும் யானை வேலிக்கு வனஉயிரிகள் திணைக்கள ஒத்துழைப்பு தேவை

## வலியுறுத்தினார் முஷாரப் எம்.பி.

(கே எ ஹமீட்)

நிந்தவூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் தலைமையில் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் அப்துல் லத்தீப் ஒருங்கிணைப்பில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசீம், நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள், பாதுகாப்புத் தரப்பினர், பள்ளிவாசல் தலைவர்கள். சமூக அமைப்புக்களின் பிரதானிகள் மற்றும் அரச அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த வருடத்தில் நிந்தவூர் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள கல்வி, சுகாதாரம், வீதி அபிவிருத்தி, விவசாயம், நீர்ப்பாசணம், கடலரிப்பு, கட்டுமாண வேலைத்திட்டங்கள், செயற்திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன் அதற்கான அனுமதியும் பிரதேச ஒருங்கிணைப்பு குழுவினால் வழங்கப்பட்டது. வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகளின் அசமந்தமான போக்கினால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும், நுற்றுக்கணக்கான ஏக்கர் நெற்காணிகளை யானை துவம்சம் செய்து வருவதாகவும் இங்கு பலரும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் முசாரப், வன உயிரிகள் அதிகாரிகளின் அசமந்தப் போக்கை தாம் வன்மையாக கண்டிக்கிறார் என்றும், விவசாய நெல் உற்பத்தியை யானைகளின் அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக அவர்களது சொந்த செலவில் விவசாயிகள் மேற்கொண்டு வரும் யானை வேலி அமைக்கும் செயற்பாடுகளுக்கு வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகள் முழுமையான ஒத்துழைப்பினை வழங்க வேண்டுமென கேட்டுக்கொண்டார். ஒலுவில் துறைமுக அபிவிருத்தி முன்னெடுப்பினால் நிந்தவூர் பிரதேசத்தில் கடலரிப்பு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும், பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு வாழ்வாதார நிவாரணத்தை வழங்குவதற்கு ஆட்சியை வலியுறுத்தும் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மேலும், ஒலுவில் துறைமுகம் இயக்கப்படாமல் சிலரின் தேவைக்காகப் பயன்படுத்தப்படுவது எல்லோரும் அறிந்த விடயமாகும். அவ்வாறு ஒலுவில் துறைமுகம் இயங்காவிட்டால் அதற்காகப் போடப்பட்ட தரைக்கற்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசீம் இங்கு கருத்துத் தெரிவித்தார்.

# அம்பாறை மாவட்ட விளையாட்டு மேம்பாடு பற்றி அமைச்சர் ஆய்வு

(கே எ ஹமீட்)

அம்பாறை மாவட்டத்தின் விளையாட்டுத்துறை அபிவிருத்தி மற்றும் விளையாட்டு சங்கங்கள், வீர, வீராங்கனைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சவால்கள் குறித்து ஆராயும் கூட்டம் அம்பாறை மாவட்ட செயலகத்தில் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொசான் ரணசிங்க தலைமையில் புதன்கிழமை இடம் பெற்றது

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல வீர திஸாநாயக்க, திலக் ராஜபக்ஷ, அம்பாறை மாவட்டச் செயலர் சிந்தக்க அபேவிக்ரம மற்றும் மாவட்டத்திலுள்ள விளையாட்டு உத்தியோகத்தர்கள், பயிற்றுவிப்பாளர்கள், விளையாட்டு சங்கங்களின் பிரதிநிதிகள் என பலரும் கூட்டத்தில் கலந்துகொண்டனர். கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டம் விளையாட்டுத்துறையில் முன்னணியில் திகழ்வதாகவும், பயிற்சிகளையும், எனைய வசதிகளையும் பெற்றுக்கொள்வதில் தாம் பெரிதும் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும் விளையாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் சங்கங்களின் பிரதிநிதிகள் இங்கு கருத்துத் தெரிவித்தனர். அத்தோடு விளையாட்டுத்துறை அமைச்சு விளையாட்டுத்துறைமேம்பாட்டிற்காககூடுதலான நிதி உதவிகளை அம்பாறை மாவட்டத்திற்கு ஒதுக்கீடுசெய்யவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர்.

பதிலளித்த விளையாட்டுத்துறை அமைச்சர், அம்பாறை மாவட்டத்தின் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காக கூடுதல் கவனம் செலுத்தப்படும் எனவும் விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டு சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கவனம் எடுப்பதாகவும் தெரிவித்தார். மாவட்ட மட்டத்தில் திறமையான இளம்வீராகளை இனம்கண்டு அவர்களுக்கு போதிய பயிற்சிகளை வழங்குவதன் மூலம் நாட்டுக்காக சிறந்த வீரர்களை உருவாக்க முடியும். அதற்காக பயிற்சியாளர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அம்பாறை மவாட்டத்தில் ரக்பி உட்பட பல விளையாட்டுச் சங்கங்கள் இல்லாமல் இருப்பதைக் காண்கின்றேன். எதிர்காலத்தில் அதற்குரிய சங்கங்களை அமைத்து அவ்விளையாட்டுக்களை வளர்தெடுக்கவேண்டும் என்றும் அமைச்சர் ரணசிங்க மேலும் தெரிவித்தார்.

# சாய்ந்தமருதில் நாடகப் பயிற்சி

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)



கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தொளஸ் மக பக வேலைத் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நாடகப் பயிற்சிப் பட்டறை சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச். சபீகாவின் ஒருங்கிணைப்பில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், வளவாளர்களாக முன்னாள் கோட்டக் கல்வி அதிகாரியும் ஓய்வு பெற்ற அதிபருமான ஏ.பீர். முஹம்மட் மற்றும் கலைஞர் அஸ்வான் மௌலானா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்சான், சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தின் அதிபர் எம்.சி. றிப்கா அன்சார், சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ். சுரேஷ்குமார், அபிவிருத்தி உத்தியோகத்தர் மாஜிதா உட்பட உயர்தர மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இப்பயிற்சிப் பட்டறையில் சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் உயர்தரம் கற்கும் மாணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். வளவாளர்களால் நாடகப்பிரதி எழுதுவது தொடர்பாகவும் நாடகம் எவ்வாறு நடிப்பது என்பது தொடர்பாகவும் செய்முறை விளக்கங்களோடு பயிற்சிகளும் வழங்கப்பட்டன.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்குக் காரணமான குற்றவாளிகள் சர்வதேச நீதிமன்றில் நிறுத்தப்படவேண்டும்

## வேலன் சுவாமிகள் ஆக்ரோஷம்




கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி விசாரணை சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்டு இனப்படுகொலையைச் செய்திருக்கக்கூடிய இனப்படுகொலையாளிகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றிலே நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படவேண்டும் என வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் இடம்பெற்ற மாபெரும் கவனவீர்ப்புப் பேரணியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது ஒப்படைக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது? சரணடைந்த உறவுகளுக்கு என்ன நடந்தது? வீடு வீடாகச் சென்று கடத்தப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? எனக் கடந்த 14 வருடங்களாக எமது தாய்மார்கள் வீதிகளிலும், கொளுத்துகின்ற வெய்யிலிலும் நீண்டகாலமாகப் போராடி வருகின்றனர்.

இவ்வாறான சூழலில் அண்மையில் கொக்குத் தொடுவாயில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழி என்பது மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது.

இன அழிப்பைச் செய்திருக்கக்கூடிய இந்த இலங்கை அரசும், அரசுடைய இயந்திரங்களும் இதற்கான விசாரணையை முன்னெடுப்பதென்பது போலித்தனமானது. தமிழர்களான எமக்கு உள்ளக விசாரணையிலே நம்பிக்கையில்லை.

ஆகையால்தான் நாம் சர்வதேச கண்காணிப்பினையும், சர்வதேச விசாரணையையும் வேண்டி நிற்கின்றோம்.

சர்வதேச வல்லரசு நாடுகள், சர்வதேச அமைப்புக்கள் இந்த விடயத்திலே தலையிட்டு, நீதிக்கான குரலை எழுப்பவேண்டும்.

உண்மையை உண்மையான விதத்திலே கண்டறியவேண்டும். உண்மைக்குழு, நல்லிணக்கக்குழுவென எத்தனையோ ஆணைக்குழுக்களைக் கண்டுவிட்டோம். எதுவுமே நடந்ததாகத் தெரியவில்லை.

காலம் இழுத்தடிக்கப்படுகின்றது. உண்மை மறைக்கப்படுகின்றது. ஈழத்தமிழர்களுடைய நீதி மறுக்கப்படுகின்றது என்பதுதான் உண்மை.

ஆகவே, சர்வதேசம் தலையீடுசெய்தால்தான் உண்மை வெளிவரும். அதையே நாம் ஏற்றுக்கொள்ளுவோம். அதுவரையில் நாம் உள்ளக விசாரணையையோ, வேறு எந்தப் பொறிமுறையையோ ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

இப்படியான மனிதப் புதைகுழிகள் எமது தமிழர் தாயகத்தில் வெளிப்படுகின்றமை, இங்கு இன அழிப்பு இடம்பெற்றது என்பதற்கு ஆதாரமாகஇருக்கின்றது. இயற்கையின் அருளால் அவை வெளிப் படுத்தப்படுகின்றன. தற்போது உண்மைகள் வெளிவரும் காலம் வந்துவிட்டது.

ஈழத் தமிழினம் விளித்துக்கொள்ள வேண்டிய தருணம் இது-வாகும். எமக்குள்ளே நாம் அமைப்புக்களாகவும், கட்சிகளாகவும், தமிழ்த்தேசியப் பற்றாளர்களாகவும் அனைவரும் ஓரணியாக ஒன்றிணைந்து செயற்படவேண்டிய காலம் வந்துவிட்டது.

இன்னும் எத்தனை காலம்தான் எங்களை நாங்களே ஏமாற்றிக் கொண்டிருக்கப் போகின்றோம். ஆகவே தமிழர்களாக அனைவருமே கட்சி பேதங்களைக் கடந்து, மத பேதங்களைக் கடந்து, பிரதேச பேதத்தினைக்கடந்து, அமைப்புகளுக்குள் இருக்கக்கூடிய நிர்வாக பேதங்களைக் கடந்து, அனைத்துப் பேதங்களையும் கடந்து அனைவரும் ஓரணியிலே செயற்படவேண்டும். அடிப்படை நீதிப்படி செயற்படவேண்டும். அவ்வாறு ஒன்றிணையும்போதுதான் எமக்கான நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கும்.

ஈழத் தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வுஎன்பதுசர்வதேசத்தினுடைய ஏற்பாட்டிலும், சர்வதேசத்தினுடைய கண்காணிப்பிலும் நடத்தப்படுகின்ற பொதுசன வாக்கெடுப்பினூடாகவே எங்களுடைய தலைவிதியை நாங்கள் தீர்மானிக்கமுடியும். இது மிகவும் அடிப்படையான ஜனநாயகப் பண்பாகும். ஆகவே சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

மனிதப்புதைகுழி விசாரணை சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்டு இனப்படுகொலையைச் செய்திருக்கக்கூடிய இனப்படுகொலையாளிகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றிலே நிறுத்தப்பட்டுஅவர்கள் தண்டிக்கப்படவேண்டும்.

காலம் காலமாகத் தமிழர்களாக நாம் இயற்கையை வழிபட்டோம். இறைவனை வழிபட்டோம். அந்த வழிபாட்டையே தற்போது மாற்றுகின்ற சூழல்தான் குருந்தூர்மலையிலும், வெடுக்குநாறி மலையிலும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது.

பிரித்தானியர்கள் இங்கு வந்து ஆட்சி செய்வதற்கு முன்பாக தனித் தமிழ் இராட்சியமாக பண்டாரவன்னியனாக இருக்கலாம், சங்கிலியனாக இருக்கலாம் வீரத் தமிழ் மன்னர்கள் ஆண்ட பூமி இதுவாகும்.

பிரித்தானியர்கள் இங்குவந்து எந்தவொரு ஜனநாயகமும் இல்லாமல், அனைவரையும் ஒரே நாடாக வாழவேண்டுமென ஒன்றிணைத்ததுதான் இன்று நாம் துன்பப்படுவதற்குக் காரணமாகும்.

ஆகவே, 1948 ஆம்ஆண்டுக்குப் பிற்பாடுஇற்றைவரைஇடம்பெற்றிருக்கக்கூடிய அத்தனை இனப்படுகொலைகளும் 1956ஆம் ஆண்டாக இருக்கலாம், 1977ஆக இருக்கலாம், 1978ஆக இருக்கலாம், 1983கறுப்பு ஜூலை இனப்படுகொலையாக இருக்கலாம், 2009முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையாக இருக்கலாம் அத்தனை இனப்படுகொலைகளும் எமது இனம் அழிக்கப்பட்டி ருக்கின்றது.

தற்போது கட்டமைப்பு ரீதியிலும், வேறு விதமாகவும் போதைப்பொருள், இலஞ்ச ஊழல் என அனைத்துச் செயற்பாடுகளும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே இலங்கை அரசால் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன. நீதிக்காகக் குரல்கொடுக்கின்றசிவில் சமூகசெயற்பாட்டாளர்கள், அரசியல் தலைவர்கள், திடீரென எவ்வித விசாரணைகளுமின்றி, எந்தவித நோக்கமுமின்றி கைதுசெய்யப்படுகின்றனர். ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். இவ்வாறாக திறந்த வெளிச்சிறையிலே நாம் வாழ்ந்துகொண் டிருக்கின்றோம்.

இப்படியான நிலையில் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்பதே எமது உறுதியான வேண்டுகோளாக இருக்கின்றது. - என்றார். (05)


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்






4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

# தமிழ் நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினால் பிழையெனக் கூறும் தலைவர்கள் இருக்கும்வரை நீதித்துறை கேள்விக்குறியே

## சிறிதரன் எம்.பி. காட்டம்



தமிழ் நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினால் பிழை என கூறும் இலங்கையின் அரசியல் தலைவர்கள் இருக்கும் வரை இலங்கையின் நீதித்துறை கேள்விக்குறியே என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும் சர்வதேச நிபுணத்துவம் மற்றும், கண்காணிப்பை வலியுறுத்தியும் தண்ணிமுறிப்பு குருந்தூர் மலை விவகாரம் உள்ளிட்ட தமிழர் தாயகத்தில் இடம்பெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் முல்லைத்தீவில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்கருத்துதெரிவிக்கையில்-

வடக்கு, கிழக்குதழுவிய முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குளாய் கொக்கு தொடுவாயில்அளவுகணக்குதெரியாதளவில் போராளிகள், மக்கள் ஆயிரக்கணக்கில் புதைக்கப்பட்ட மனித புதைகுழிக்கு எதிராக ஒரு சர்வதேச விசாரணை வேண்டி சர்வதேசத்தின் மேற்பார்வையோடு நீதியான முறையில் விசாரணை செய்யப்பட வேண்டும் என இப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழ் தேசிய மண்ணிலே பல்வேறுபட்ட இடங்களில் மனித புதைகுழிகள் இன்றும் அடையாளம் காணப்பட்டுள்ளன. அந்த மனித புதைகுழிகள் வெளியில் வருமானால் இலங்கை இராணுவம் இலங்கையினுடைய கடற்படை, விமானப்படை, பாதுகாப்பு படைகள் கேள்விக்குட்படுத்தப்படுவார்கள்.


குறிப்பாக இப்போது கொக்குத்தொடுவாயிலே கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி, மண்டைதீவிலே இருக்கின்ற மனித புதைகுழி , இன்னும் பல இடங்களிலே இராணுவ முகாம்களிலே மறைத்து வைக்கப்பட்டிருக்கும் மனித புதைகுழிகள் என்பவை இராணுவம் மற்றும் அரச படைகளால் மிகவும் வன்மமான முறையிலே அவர்கள் அழைத்து செல்லப்பட்டு மிக நுட்பமான முறையில் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட தமிழ் உறவுகளுடையதாக இருப்பதால் இந்தப் போராட்டத்தில் மக்கள் அணி திரண்டிருக்கிறார்கள்.

சர்வதேச சமூகத்திடம் நாம் கோருவது ஒரு நீதி விசாரணை வேண்டும். நாங்கள் தொடர்ந்தும் வஞ்சிக்கப்படுகின்றோம். இந்த மண்ணிலே நீதியற்ற மனிதர்களாகத் தமிழர்கள் தொடர்ந்தும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த நீதி விசாரணை என்பதற்காகத்தான் ஒரு சர்வதேச நீதி கோரி மக்கள் அணியாக திரண்டுதமது ஆதங்கத்தையும், உணர்வுகளையும் வெளிப்படுத்துவதாக இந்தப் போராட்டம் அமைந்துள்ளது.

மனித புதைகுழிகள் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டாலும் அது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படவில்லை. இந்நேரத்தில் புதிதாக மனித புதைகுழிகள்கண்டுபிடிக்கப்படுகின்றன. இதற்குநீதியானவிசாரணைநடத்தப்பட வேண்டும்.

இலங்கை அரசாங்கம் என்பது உண்மையில் நீதியாக நடப்பதில்லை. தமிழ் நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினால் கூட அதனை பிழை என கூறும் இலங்கையின் அரசியல் தலைவர்கள் இருக்கும் வரை இலங்கையின் நீதித்துறை சரியாக செயற்படுமா? இவர்களால் நீதியான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமா? என்பது கேள்விக்குறியே. அதனால்தான் செம்மணி மனித புதைகுழியிலிருந்து மண்டைதீவு மனித புதைகுழி மற்றும் கொக்குதொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி, மன்னாரில் இருக்கும் மனித புதைகுழி என இவ்வாறு பல இடங்களிலும் மனித புதைகுழிகள் தோண்ட தோண்ட தமிழர்களாக வந்து கொண்டிருப்பதுதான் மிகப்பெரிய அநியாயம். அந்த அநியாயத்தினுடைய நீதி என்பது இலங்கையிலே கிடைக்காது. அதனால் தான் இந்த சர்வதேச நீதி விசாரணையை கோரி இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருக்கின்றோம் எனமேலும்தெரிவித்தார்.(05)

# சேவையில் இறந்த வான்படையினருக்கு கொழும்பு இந்து ஆலயத்திலும் வழிபாடு



விமானப்படையில் பணியாற்றிய போது உயிரிழந்தவீரர்களை நினைவுகூரும் இந்து சமய நிகழ்வு அண்மையில் கொழும்பு 10 கப்டன் தோட்டத்திலுள்ள ஸ்ரீ கைலாசநாதர் சுவாமி ஆலயத்தில் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

விமானப்படையால்வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் இந்து சமய வழிபாடுகள் இறுதி யுத்தத்தின் போது தாய்நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த விமானப்படை வீரர்கள் மற்றும் சேவையின் போது இறந்த விமானப்படை உறுப்பினர்கள் மற்றும் தற்போது கடமையாற்றிவரும் விமானப் படை அங்கத்தார்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும்விமானப்படை தளங்களுக்கான ஆசீர்வாதம் பெறுபவதற்காக இடம் பெறுகிறது.

இந்த நிகழ்வில் விமானப்படை சேவா வனிதா பிரிவின் தலைவி இனோகா ராஜபக்ஷ மற்றும் விமானப்படை தலைமை தளபதி மற்றும் விமானப்படை பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் படைவீரர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(05)



வெளிநாட்டவர் வருகை தரும் காலத்தில்

# யாழ். உணவகங்களை நெறிப்படுத்த மாவட்டச் செயலகம் களத்தில் குதிப்பு

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உணவுச்சாலைகள், சிற்றுண்டி சாலைகள், வெதுப்பக விற்பனைகள் போன்றவற்றை ஒழுங்குபடுத்தும் நோக்கோடு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், யாழ்ப்பாண வர்த்தக சம்மேளன பிரதிநிதிகள், யாழ்ப்பாண சுற்றுலாதுறை அமைப்பின் பிரதிநிதிகள், மாநகர ஆணையாளர், பிரதேச சபை நகர சபை செயலாளர்கள், உணவுச்சாலை நடத்துபவர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடனும் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மேலதிக அரசாங்க அதிபர்கள், மாவட்ட உதவிச் செயலாளர், பிரதேசசெயலாளர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடனும் அன்று கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரியால் 1980 ஆம் ஆண்டில் 26 ஆம் இலக்க உணவுச் சட்டம் தொடர்பான விளக்கம் வழுங்கப்பட்டதுடன் உணவு விற்பனை நிலையங்களில் காணப்படும் சுகாதாரம், உணவின் தரம், அளவு, உணவு விற்பனை நிலையங்களில் உணவை கையாளுபவர்கள் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் உணவுச்சாலைகளுக்கான பதிவு, தரப்படுத்தல், குறித்த சட்டத்திற்கு கீழான ஒழுங்கு விதிகளும் தண்டனைகளும் போன்ற பல்வேறு விடயங்கள் விளங்கப் படுத்தப்பட்டன.

மேலும், இந்தக் கலந்துரையாடலில் வெதுப்பக உற்பத்திகளின் நிறை, நிர்ணயிக்கப்படும் விலை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் நடமாடும் வெதுப்பக விற்பனை நிலையங்களில் உள்ள சுகாதார குறைபாடுகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது.

பெரும்பாலான யாழ்ப்பாண நகர உணவுச்சாலைகள் உரிய தரங்களை கொண்டிருக்கவில்லை என்பதுடன், குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் போதியளவு காய்கறி உற்பத்தி செய்யப்படுவதுடன் அவை வேறு மாவட்டங்களுக்கு விற்பனைக்கு எடுத்துச் செல்லப்படும் நிலையில் இங்குள்ள உணவு நிலையங்களில் இத்தகைய மரக்கறி வகைகளை பயன்படுத்தப்படாமலும் சோயாமீற், கடலை, பூசணி போன்றவற்றையே கறிகளாக பயன்படுத்துவதாகவும் நுகர்வோர் மத்தியில் அதிருப்தியான நிலை காணப்படுவதாகவும் அரசாங்க அதிபரால் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் உணவுச்சாலைகளில் கடமையாற்றுவர்களுடைய பொதுமக்கள் தொடர்பாடல், உடை அமைப்பு, உணவுச் சாலைகளுக்கான இட வசதி போன்ற பல்வேறு விடயங்கள் பற்றியும் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் வைத்தியர்களால் விவாதிக்கப்பட்டது.

எதிர்வரும் வாரங்களில் நல்லூர் கந்தசாமி ஆலயம், செல்வச்சந்நிதி முருகன் ஆலயம், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம் போன்ற பிரபலமான ஆலயங்களின் உற்சவம் ஆரம்பிக்கப்படும் நிலையில் வெளிநாட்டில் வசிப்போர் பெருமளவில் இங்கு வர இருக்கின்றனர்.

மேற்படி உணவுச் சாலைகள், விடுதிகள், வெதுப்பகங்கள் பொது மக்களின் நன்மை கருதி உரிய தரங்களை பேணுவதுடன் சுகாதாரத் துறையினரால் சிபாரிசு செய்யப்பட்ட வகையில் மாற்றங்களையும் திருத்தங்களையும் மேற்கொண்டு பயிற்றப்பட்ட தொழிலாளர்களை தங்கள் ஸ்தாபனங்களுக்கு சேவைக்கு அமர்த்துதல் வேண்டுமென உணவுச் சாலை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பின்வரும் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. உணவு மற்றும் சிற்றுண்டி வகைகளில் விற்பனை செய்யப்படும் உணவுகளின் அளவு, நிறை என்பவற்றுக்கமைய விலைகள் தீர்மானிக்கப்பட்டு காட்சிப்படுத்தல் வேண்டும். இதற்காக உணவுச் சாலை உரிமையாளர்கள் தமக்குள் ஓர் அமைப்பை உருவாக்கி மேற்படி அளவு, நிறை என்பவற்றுக்கேற்ப பொதுவான விலையை தீர்மானித்து எதிர்வரும் ஆவணி 20 ஆம் திகதிக்கு முன்னதாக அதனை மாவட்ட செயலகத்துக்கு அந்த விவரத்தை பொதுமக்களுக்கு வழங்கும் வகையில் ஊடகங்களுக்கு பகிரங்கப்படுத்த அறியத் தருவதுடன் தெரியப்படுத்தவும் வேண்டும்.

வெதுப்பக உற்பத்திகளுக்குரிய விலைகளும் உற்பத்தியின் அளவு, நிறை என்பவற்றுக்கேற்ப வெதுப்பக உரிமையாளர் சங்கங்களால் நிர்ணயிக்கப்பட்டு அவை பகிரங்கப்படுத்தப்படுவதோடு விற்பனை நிலையங்களில் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பான விவரங்கள் ஆவணி 20 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட செயலகத்துக்கு அறிக்கையிட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்டத்தின் பல நகரங்களிலும் குறிப்பிடத்தக்க உணவுச்சாலைகள் உற்பத்தி மற்றும் சேவை வழங்கயில் உயர்தரத்தை பேணி அவற்றுக்குரிய சான்றிதழை சுகாதாரப் பிரிவினரிடம் பெற்றுக் கொண்ட போதிலும், பெரும்பாலான கடைகள் புதிய தரத்துக்கு அமைவாக வேண்டியதை கருத்திற் கொண்டு யாழ்ப்பாண வணிகர் அனுசரணையுடன் பிரதேசசெயலகரீதியாக சிறந்த தரத்தைப் பேணும் உணவுச் சாலைகளை கௌரவித்து சிறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கான நிகழ்வுகளும் ஏற்பாடு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது - என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)



# பொலிஸாரின் ஆதரவுடனேயே சட்டவிரோத மணல் அகழ்வு

கிளிநொச்சி மக்கள் அமைப்புகள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வுகள் பொலிஸாரின் துணையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறித்த சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் பொலிஸாருக்கு அல்லது விசேட அதிரடிப்படையினருக்கு தகவல்களை வழங்கினாலும் அவற்றை அவர்கள் கண்டு கொள்வதில்லை என்றும் அவற்றை ஊக்குவிக்கும் விதத்திலே அவர்களது செயற்பாடு அமைந்திருப்பதாகவும் பொது அமைப்புகளாலும் பொது மக்களாலும் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் கிளிநொச்சியில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புகுழு கூட்டத்திலும் இந்த விடயம் பற்றி நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த பகுதிகளில் குறிப்பாக ஊரியான், முரசுமோட்டை, குஞ்சுபரந்தன், குடமுருட்டி, செருகன் ஆகிய பகுதிகளில் பொலிஸாரின் துணையுடனே குறித்த சட்டவிரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் விவசாய அமைப்புகளாலும் விவசாயிகளாலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதே வேளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் அனுமதியற்ற மணல் அகழ்வுகளால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பிலும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரால் எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கலாம் என்ற திட்டத்தை பொலிஸாரே முன்வைக்க வேண்டும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரித்துள்ளார்.

மாவட்டத்தில் தினமும் பொலிஸாரால் அவர்களது துணையுடன் பொலிஸ் வாகனங்களோடு பாதுகாப்பாக கொண்டு செல்லப்படுதல் போன்ற படங்களும் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# தமிழர் பகுதிகளில் உள்ள எந்தவொரு புதைகுழிக்கும் நீதி கிடைக்கவில்லை

சட்டத்தரணி சுகாஷ் வேதனை

தமிழர் பகுதிகளில் காணப்படும் எந்தவொரு புதைகுழிக்கும் நீதி கிடைக்கவில்லை. கொக்குத்தொடுவாயும் அவ்வாறு அரங்கேறிவிடக் கூடாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளரும், சட்டத்தரணியுமான க.சுகாஷ் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும் சர்வதேச நிபுணத்துவம் மற்றும் கண்காணிப்பை வலியுறுத்தியும் தண்ணிமுறிப்பு குருந்தூர்மலை விவகாரம் உள்ளிட்ட தமிழர் தாயகத்தில் இடம்பெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் வெள்ளிக்கிழமை முல்லைத்தீவில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு நீதிகோரியும், காலதாமதம் இல்லாமல் ஈழத்தில் அரங்கேறிய இனப்படுகொலைக்கு நீதி கோரியும் மாபெரும் பேரணி இடம்பெற்றிருந்தது.

இவ்வளவு காலமும் தமிழர் பகுதிகளில் பல புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் இன்று வரைக்கும் எந்தவொரு புதைகுழிக்கும் நீதி கிடைக்கவில்லை.

ஆனால், கொக்குத் தொடுவாயும் அந்த விடயம் அரங்கேறிவிடக்கூடாது என்பதற்காகத் தமிழர் தாயகம் திரண்டு ஹர்த்தாலை அனுஷ்டிக்கிறார்கள்.

இந்த மாபெரும் பேரணியைக் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் அழைப்பின் பேரில் கலந்துகொண்டிருக்கின்றோம். இது தான் தமிழ் மக்களின் உணர்வு.

இது தான் எங்களது அபிலாஷை. ஆகவே இனியும் தாமதிக்காமல் உடனடியாக சர்வதேச விசாரணையை நடத்துவதோடு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச தராதரங்களுக்கு அமைவாக சர்வதேசத்தின் நிபுணத்துவத்தோடு மேலதிக அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் ஐ.நா. மன்றம் இனியும் காலதாமதம் செய்யக்கூடாது என மேலும் தெரிவித்தார். (05)

# மனித எச்சங்கள் தொடர்பான உண்மைகள் அறியப்படவேண்டும் என்கிறார் டக்ளஸ்

சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவது தொடர்பாக பொலிஸாரின் சாக்குப்போக்குகளையும் உறுதிமொழிகளையும் தொடர்ந்தும் கேட்டுக்கொண்டிருக்க முடியாது என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஒரு மாதகாலத்தினுள் உறுதியான தீர்வு காணப்பட வேண்டும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற மாவட்ட ஒருங் கிணைப்புக் குழு கூட்டத்தின் போதே அமைச்சரால் இவ்வாறு கடுமையான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கிராம மட்டத்திலான விழிப்பு குழுக்களை உருவாக்குவதன் மூலம் சட்ட விரோத மணல் அகழ்வு, போதைப் பொருள் பயன்பாடு உட்பட்ட சமூக விரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியும் என்பது சிவபுரம் கிராமத்தில் நிரூபனமாகியுள்ள நிலையில், கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்து கிராமங்களிலும் விழிப்புக் குழுக்களை வலுப்படுத்தி பொலிஸாருடன் இணைந்து செயற்படுத்துவதற்கு கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, சிவபுரம் கிராமத்தில் கடந்த காலங்களில் சமூக விரோதச் செயல்கள் அச்சுறுத்தும் வகையில் அதிகரித்திருந் தது.

இந்நிலையில் குறித்த கிராம இளைஞர்கள் ஒன்றிணைந்து விழிப்புக்குழுவினை உருவாக்கி கிராமத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனடிப்படையில் குறித்த கிராமத்தில் சமூக விரோதச் செயற்பாடுகள் கணிசமானளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இணைத் தலைவர் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.என். சார்ள்ஸ் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சுகாதாரம், கல்வி, விவசாயம், சட்ட விரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தல் உட்பட



பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டு முக்கிய தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில், வடக்கு, கிழக்கில் மக்களின் இயல்பு வாழ்வை சீர்குலைக்கும் நோக்கத்தோடு நடத்தப்படும் கடையடைப்பு கோரிக்கையை நிராகரிக்கும் வகையில் கூட்டத்தில் கலந்து கொண்ட அரச அதிகாரிகள் மற்றும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் நன்றியை தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கொக்குளாய் கொக்குத் தொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனித எச்சங்கள் தொடர்பான உண்மைகள் கண்டறியப்பட வேண்டும் என்பதே தன்னுடைய நிலைப்பாடாக இருக்கின்ற போதிலும், மக்களின் இயல்பு வாழ்கை பாதிக்கப்படும் வகையிலான செயற்பாடுகளை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், குறித்த மனித எச்சங்கள் தொடர்பாக பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில், விஞ்ஞான ஆய்வுகளின் ஊடாக அவை எந்தக் காலப் பகுதிக்குரியவை என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வால் வலியுறுத்தப்பட்டுள்ளமை சுட்டிக் காட்டத்தக்கது. (05)

# அங்கொடயில் நோயாளி கொலையா? விசாரணையை தொடங்கிய பொலிஸ்



அங்கொட தேசிய மன நல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நோயாளி ஒருவர் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முல்லேரியா பொலிஸாரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தவரின் உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வட்டரெக பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 47 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நீண்டகாலமாக மன நோய்க்கு ஆளான குறித்த நோயாளி, தீவிரமடைந்த நோய் நிலைமை காரணமாக ஜூலை 20 அங்கொட மனநல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

ஜூலை 25 அதிகாலைவேளையில் குளியலறையில், வழுக்கி விழுந்த சந்தர்ப்பத்தில், தலையில் அடிபட்டதால் அவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

நோயாளியின் சடலம் முத்திரையிடப்பட்ட நிலையில், உறவினர்களிடம் வழங்கப்பட்டதன் காரணமாக உறவினர்களுக்கு ஏற்பட்ட சந்தேகத்தால் முல்லேரியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதன்படி அந்த வைத்தியசாலையின் விசேட சட்டவைத்திய அதிகாரி சன்ன பெரேராவினால் பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது.

ஆயுதங்களால் தாக்கப்பட்டமையால் ஏற்பட்ட பலத்த காயம் காரணமாகவே இறப்பு சம்பவித்துள்ளது என்று உறுதி செய்யப்பட்டது.

வைத்தியசாலை பணியாளர்களின் தாக்குதலுக்கு இலக்காகிய நிலையிலேயே அவர் உயிரிழந்தார் என்று குறித்த நோயாளியின் உறவினர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இந்தவிடயம் தொடர்பில், தேசிய மனநல வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் தம்மிக்கா விஜேசிங்கவைத் தொடர்பு கொண்டு ஊடகங்கள் வினவியபோது, சுகாதார அமைச்சின் அனுமதியின்றி எந்தக் கருத்துக்களையும் ஊடகங்களுக்கு வெளியிட முடியாது - என்று பதிலளித்தார். (02)

# லொறி – ஓட்டோ நேருக்கு நேர் மோதி தந்தையும் மகளும் பரிதாபச் சாவு

வாகன விபத்தில் தந்தையும் மகளும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கொழும்பு -கடுவெல பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

லொறியும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கோர விபத்தில் ஓட்டோவைச் செலுத்திச் சென்ற 48 வயதுடைய தந்தையும்,



அதில் பயணித்த 22 வயதுடைய மகளும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் தனது மகளை வேலை முடிந்த பின்னர் வீட்டுக்கு ஓட்டோவில் தந்தை அழைத்துச் சென்றபோதே விபத்தில் சிக்கி இருவரும் சாவடைந்துள்ளனர்.

லொறியின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

# RADIANT DAWN

**A Sunday Supplement in English to Kalaikkathir**

Page I | English for all | Sunday the 30th July 2023



**We welcome students' articles in word for publication**

-Editor-

kalaikkathiredu@gmail.com




## MY FRIENDS

I have some very good friends. I ride the bus with my friends Tony and Brian. They live on my street. At school, Tony, Brian and I play with Lisa and Emma on the playground. We all eat lunch together too. I also have friends from my soccer team named Hunter and Jake. Sometimes I get to see my cousins Abby and Kevin. They are my friends too. I like all of my friends.

**Questions:**

Write answers to the questions:

1. Which friends ride the bus?

   ______________________________

2. Which friends play soccer?

   ______________________________

3. Who plays with Tony and Brian on the playground?

   ______________________________

4. Who are the cousins?

   ______________________________

5. Who eats lunch together?

   ______________________________

www.k5learning.com

## My Pets







I have a dog, a cat and a hamster. I love them all. My dog's name is Snoopy; my cat's name is Whiskers, and my hamster's name is Nibbles. Snoopy is playful, and he likes bones. Whiskers sleeps in my bed. Nibbles loves running in his wheel. They are all soft and furry.

**Questions:**

Write answers to the questions:

1. How many pets are there?

   ____________________

2. What is the hamster's name?

   ____________________

3. Who sleeps in the bed?

   ____________________

4. What does Snoopy like?

   ____________________

5. Which pets are soft and furry?

   ____________________

www.k5learning.com

## At the Zoo

I went to the zoo yesterday. I saw a lot of lions and monkeys. The Lions sat on the rocks. The monkeys were swinging from the trees.




1. Where did I go yesterday?
2. What animals did I see?
3. Which animal sat on the rocks.
4. Which animal was swinging from the trees?

## Family Picnic



I am James. My family went to a picnic last Saturday. My mom brought a lot of snacks. We went to the park. We ate a lot and played hide and seek.

Questions:

1. What is the boy's name?
2. What did the family do?
3. What did mom bring?
4. What did they do at the park?

**"konwledge isn't free. You have to pay attention"**

## Dario's Pet

Dario was alone in his room, He was drawing his pet dog. His dog was quiet while he was drawing it.

Dario colored the picture brown and white. He wrote a story under it. It was like this.

"This is my pet. His name is Spotty. He is my playmate. I love Spotty."

### Comprehension Questions:

1. What was Dario doing?
2. What was Dario's pet?
3. What did Dario write under the drawing?
4. What did Dario call his pet?
5. What was Dario's playmate?

Teacher Fun Files

## Helping Mother

Do you help mother at home like Merla does? What do you do?

Merla, a grade two pupil , goes home as her class is over. She helps her mother sell in their little store. She helps in closing the store at night.

In the morning, Merla buys bread from a big bakery. They sell the bread in their store. Her mother is happy for her help.

### Comprehension Questions:

1. What grade is Merla in?
2. Who does Merla help?
3. Where does Merla buy bread?
4. What do they do with the bread?
5. What does Merla do to help her mother?

Teacher Fun Files

## First Day in School

It was the first day of classes. The grade two children were happy. They were telling stories about themselves.

"I am eight years old. My father is a teacher," Edna said.

"I live in Tondo. I am also eight years old," Lucita said.

"My mother is a vendor. My father is a driver. I am nine years old," Rolando said.

### Comprehension Questions:

1. What grade were the children in?
2. What is Edna's father's job?
3. Who lives in Tondo?
4. Who was not eight years old?
5. Whose father was a driver?

Teacher Fun Files

## Helping Mother

Do you help mother at home like Merla does? What do you do?

Merla, a grade two pupil , goes home as her class is over. She helps her mother sell in their little store. She helps in closing the store at night.

In the morning, Merla buys bread from a big bakery. They sell the bread in their store. Her mother is happy for her help.

### Comprehension Questions:

1. What grade is Merla in?
2. Who does Merla help?
3. Where does Merla buy bread?
4. What do they do with the bread?
5. What does Merla do to help her mother?

Teacher Fun Files by Oli

GR 3

# The Long Night

Read the information and then answer the questions.



I live in a cold country. It is at the top of the world. This means we get lots and lots of snow. I love to play outside when we have snow. I can build a snowman and go skiing. Where I live we something called the long night. This means we do not see the sun for two months in winter! So it is dark all day, and well, all night! We wake up and it is dark, we go to school and it is dark, and we come home and it is dark! So, we get a lot of snow, but we have to play in the dark. In the summer we have the opposite of the long night can you guess what that is?

Can you answer the questions in full sentences?

What can she do in the snow?

______________________

How long is the sun gone for in winter?

______________________

Why do you think her country gets a lot of snow?

______________________

What do you think is the opposite of the long night?

______________________

127 words

GR 3

# The Camping Trip



Read the story then answer the questions.

I am camping with my friends today. We are in the forest. We are taking a big tent to sleep in. My friends are bringing some food. We are going to have a barbeque when it gets dark. We have some sausages and chicken wings to cook on the barbeque. After dinner we are going to tell scary stories to each other. I hope I can sleep after that! My parents are coming to see us in the morning. We will all go swimming in the lake.

Can you answer the questions in full sentences?

Where did they go camping?

______________________

What kind of stories will they tell each other?

______________________

Who is coming in the morning?

______________________

What will they all do in the morning?

______________________

87 words

GR 3

# The Storm

Read the story then answer the questions.



Last night we had a big storm in my town. It rained and rained all night. The thunder was so loud it woke us all up! So we went to the window to watch. There was so much lightning in the sky. My sister was very scared because it was so loud! I was a little scared, but it was great to watch. We went to bed before the end of the storm. In the morning there was lots of water on the ground from the rain. We put on our raincoats and splashed in the puddles.

Can you answer the questions in full sentences?

What happened in the town last night?

______________________

Why did they wake up?

______________________

Who was the most scared?

______________________

What did they do in the morning?

______________________

97 words

GR 2/3

# Super Sunflowers

Read the story then answer the questions.



We are growing a flower in our garden. It is a very tall flower. It is called a sunflower. Can you see why? The top is big, round and yellow just like the Sun. we have to give it water everyday and then we can watch it grow. My sunflower is the biggest. It will grow 8cm in one week. When it is very big it will be 4 metres tall! That is bigger than my dad! It will make seeds which we can put in the ground. Then we can grow sunflowers again next year. I hope I can grow an even bigger flower!!

Can you answer the questions in full sentences?

What is the name of the flowers?

______________________

How big can a sunflower grow?

______________________

What can they do with the seeds?

______________________

Why do they call it a sunflower?

______________________

105 words

# To Sir, with Love



To Sir, with Love is a 1967 British drama film that deals with social and racial issues in an inner city school. It stars Sidney Poitier and features Christian Roberts, Judy Geeson, Suzy Kendall, Patricia Routledge and singer Lulu making her film debut. James Clavell directed from his own screenplay, which was based on E. R. Braithwaite's 1959 autobiographical novel of the same name.

The film's title song "To Sir with Love", sung by Lulu, peaked at the top of the Billboard Hot 100 chart in the United States for five weeks in the autumn of 1967 and ultimately was the best-selling single in the United States of that year. The movie ranked number 27 on Entertainment Weekly's list of the 50 Best High School Movies.[4]

A made-for-television sequel, To Sir, with Love II (1996), was released nearly three decades later, with Poitier reprising his starring role.

### Plot

In the mid-1960s, Mark Thackeray, an immigrant to Britain from British Guiana, has been unable to obtain an engineering position despite an 18-month job search. He accepts a teaching post for Class 12 at North Quay Secondary School in the tough East End of London, as an interim position, despite having no experience.

The pupils there have been rejected from other schools, and Thackeray is a replacement for the deceased former teacher. The pupils, led by Bert Denham and Pamela Dare (who later develops a strong crush on Thackeray), behave badly: their antics range from vandalism to distasteful pranks. Thackeray retains a calm demeanour, but loses his temper when he discovers something being burned in the classroom stove, which turns out to be a girl's sanitary towel. He orders the boys out of the classroom, then reprimands all the girls, either for being responsible or passively observing, for what he says is their "slutty behaviour". Thackeray is angry with himself for allowing his pupils to incense him. Changing his approach, he informs the class that they will no longer study from textbooks. Until the end of term, he will treat them as adults and expects them to behave as such. He declares that they will address him as 'Sir' or 'Mr. Thackeray'; the girls will be addressed as 'Miss' and boys by their surnames. They are also allowed to discuss any issue they wish. He gradually wins over the class, except for Denham who continually baits him.

Thackeray arranges a class outing to the Victoria and Albert Museum and the Natural History Museum in South Kensington which goes well. The trip is represented by a series of still photographs as Lulu sings "To Sir with Love".

He loses some support when he defuses a potentially violent situation between his student Potter and the gym teacher, Mr. Bell. He demands that Potter apologise directly to Bell, even if he believes Bell was wrong. The group later refuses to invite Thackeray to the class dance. When mixed-race student Seales' white English mother dies, the class takes up a collection for a wreath but refuse to accept Thackeray's donation. The students decline to deliver the wreath in person to Seales' house, fearing neighbourhood gossip for visiting a "coloured" person's house.

The headmaster tells Thackeray that the "adult approach" has failed, and future outings are cancelled. Thackeray is to take over the boys' gym classes until the headmaster can find a replacement. Meanwhile, Thackeray receives an engineering job offer in the post.

Pamela Dare's mother asks for Thackeray to talk to her daughter about her behaviour at home, but this annoys Pamela, whom Thackeray believes is infatuated with him. During a gym class, Denham smugly challenges Thackeray to a boxing match. Denham delivers several blows to Thackeray's face but the bout comes to an abrupt end when Thackeray delivers one punch to Denham's solar plexus. Thackeray compliments Denham's ability and suggests he teach boxing to the younger pupils next year. Denham, finally impressed by Thackeray, expresses his admiration for Thackeray to his classmates. Thackeray regains their respect and is invited to the class dance. Later, when Thackeray attends the funeral of Seales' mother, he is touched to find that his lectures on personal choice and responsibility have had an effect and the entire class has attended.

At the dance, Pamela persuades Thackeray to be her partner for the "Ladies Choice" dance. Afterward, the class presents to Thackeray "a little present to remember us by". Too moved to speak, Thackeray retires to his classroom.

A rowdy couple abruptly enters the classroom. They mock Thackeray's gift, a silver tankard and card inscribed "To Sir, with love" signed by the entire departing class, and goad Thackeray that they will be in his class next year. After they leave, Thackeray stands up and tears up the engineering job offer, reconciled to the work he has ahead of him. He then takes a flower from the vase on his desk, places it in his lapel, and leaves.

### Production

Sidney Poitier and James Clavell wanted to do the film, but Columbia was reluctant. They agreed to make the film for small fees, provided Poitier got 10% of the gross and Clavell 30% of the profits. "When we were ready to shoot, Columbia wanted either a rape or a big fight put in," said Martin Baum. "We held out, saying this was a gentle story, and we won."

The film was shot in Wapping (including the Wapping railway station) and Shadwell in the East End of London, in the Victoria and Albert Museum and at Pinewood Studios.

### Reception

Upon its U.S. release, Bosley Crowther began his review by contrasting the film with Poitier's role and performance in the 1955 film Blackboard Jungle; unlike that earlier film, Crowther says "a nice air of gentility suffuses this pretty color film, and Mr. Poitier gives a quaint example of being proper and turning the other cheek. Although he controls himself with difficulty in some of his confrontations with his class, and even flares up on one occasion, he never acts like a boor, the way one of his fellow teachers (played by Geoffrey Bayldon) does. Except for a few barbed comments by the latter, there is little intrusion of or discussion about the issue of race: It is as discreetly played down as are many other probable tensions in this school. To Sir, with Love comes off as a cozy, good-humored and unbelievable little tale."

Halliwell's Film and Video Guide describes it as "sentimental non-realism" and quotes a Monthly Film Bulletin review (possibly contemporary with its British release), which claims that "the sententious script sounds as if it has been written by a zealous Sunday school teacher after a particularly exhilarating boycott of South African oranges".

The Time Out Film Guide says that it "bears no resemblance to school life as we know it" and the "hoodlums' miraculous reformation a week before the end of term (thanks to teacher Poitier) is laughable".[8] Although agreeing with the claims about the film's sentimentality, and giving it a mediocre rating, the Virgin Film Guide asserts: "What makes [this] such an enjoyable film is the mythic nature of Poitier's character. He manages to come across as a real person, while simultaneously embodying everything there is to know about morality, respect and integrity."

The film premiered and became a hit one month before another film about troubled schools, Up the Down Staircase, appeared.

The novel's author E.R. Braithwaite loathed the film, although it provided him with some financial security, particularly because of its omission of the novel's interracial relationship.

To Sir, with Love holds an 89% "Fresh" rating on the review aggregate website Rotten Tomatoes based on 28 reviews.[11] The film grossed $42,432,803 at the box office in the United States, yielding $19,100,000 in rentals, on a $640,000 budget,[3] making it the sixth highest grossing picture of 1967 in the US. Poitier especially benefited from that film's success considering he agreed on a mere $30,000 fee in exchange for 10% of the gross box office and thus arranged one of the most impressive payoffs in film history. In fact, although Columbia insisted on an annual cap to Poitier of $25,000 to fulfill that percentage term, the studio was forced to revise the deal with Poitier when they calculated they would be committed to 80 years of those payments.

Despite the character of Mark Thackeray being a leading role, the film has been criticised in modern times for Portier's portrayal of the Magical Negro trope. Specific criticism of the portrayal was directed at the character's service as the sounding board and voice of reason for white antagonists.

# என் நேர்த்திக்கு செவிமடுக்காத மாதா சிலைகளை உடைத்தேன்

## கைது செய்யப்பட்டவர் வாக்குமூலம்

மாதாவிடம் நேர்த்தி வைத்தும் பிள்ளைகிடைக்காத விரக்தியிலேயே ஆனைக்கோட்டையில் மாதா சிலைகளை சேதப்படுத்தினேன் என்று, சிலை உடைப்பு தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் வாக்குமூலம்வழங்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் - மானிப்பாய் பொலிஸ் பிரிவில் ஆறுக்கு மேற்பட்ட இடங்களில் மாதா சிலைகள் வெள்ளிக்கிழமை அதிகாலையில் சேதப்படுத்தப்பட்டிருந்தன.இது ஒரு விதமதப்பதற்றத்தைத்தோற்றுவித்திருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுதுமலை தெற்கு, சாவல்காடு பகுதியை சேர்ந்த 32 வயதான ஒருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டார்.

அவர் சைவ சமயத்தை சேர்ந்தவர். மனைவி கிறிஸ்தவர். இருவரும் திருமணம்செய்து சில வருடங்களாகியும் பிள்ளைகள் கிடைக்காத விரக்தியில்சிலைகளைஉடைத்தேன்என்று தெரிவித்துள்ளார்.

பிள்ளை வேண்டுமென மாதவிடம் நேர்த்தி வைத்தேன். பிள்ளை கிடைக்காத விரக்தியில் இருந்தேன். இதனால் மாதா சிலைகளை சேதப்படுத்தினேன் என தெரிவித்துள்ளார்.



## மீண்டும் பணிப்பாளராக நவநீதன்

(அகீல்)

கிழக்கு மாகாண பண் பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளராக சரவணமுத்து நவநீதன் மீண்டும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கிழக்குமாகாணஆளுநர் செந்தில் தொண்டமான், மேற்படி பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளராக சரவணமுத்து நவநீதனை மீண்டும் நியமனம் செய்துள்ளமையை அடுத்து, அவர் திங்கட்கிழமை திருகோணமலையிலுள்ள தமது திணைக்கள அலுவலகத்தில் மீண்டும் பணிப்பாளர் கடமைப் பொறுப்பை ஏற்றுள்ளார். ஏற்கனவே கிழக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளராக அரும்பெரும் சேவையாற்றிவந்த சரவணமுத்து நவநீதன் சிறிது காலம் கிழக்கு மாகாண சபையின் மற்றொரு திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

முன்னைய ஆளுநரின் காலத்தில்இடம்பெற்றஇவரது இடமாற்றம் தொடர்பில் கிழக்கிலுள்ள கலை, இலக்கியவாதிகள், கலை, இலக்கிய மண்றங்கள், இலக்கிய ஆர்வலர்கள் பெரும் அதிருப்தி தெரிவித்து வந்ததுடன், கிழக்கின் கலை இலக்கிய, பண்பாட்டு வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் பல்வேறு காத்திரமான செயற்திட்டங்களை முன்னெடுத்து வந்தபணிப்பாளர்நவநீதனை மீண்டும் நியமிக்க வேண்டுமெனவும் தொடர்ச்சியமானகோரிக்கைகளையும் விடுத்து வந்தனர்.

இதன் பயனாக கிழக்கின் புதிய ஆளுநர் செந்தில் தொண்டமான் கிழக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளராக மீண்டும் சரவண முத்து நவநீதனை நியமித்துள்ளமை பெரும் வரவேற்பைப் பெறற்றுள்ளதுடன்,

பல்வேறு கலை இலக்கிய அமைப்புகளும், கலை இலக்கியவாதிகளும் ஆளுநரின் இந்த நடவடிக்கைக்கக்குப் பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துள்ளனர்.

பணிப்பாளர் நவநீதன் ஏற்கனவே, பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளராக விருந்த பணிக்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் கலாச்சார பண்பாட்டியல்சார் விடயங்களை அடையாளப்படுத்துதல், பேணுதல், ஆவணப்படுத்துதல் போன்ற காத்திரமானசெயற்பாடுகளை முன்னெடுத்து வந்தார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இவரது காலத்தில் வெளியிட்ட கிழக்கின் 100 சிறு கதைகள் எனும் பெருந்தொகுப்பு நூல் பணிப்பாளர் நவநீதனின் அளப்பரிய சேவைக்கு எடுத்துக்காட்டாகும்.

இதே போன்று கிழக்கு மாகாணத்தவர்களின் படைப்புக்களையும், படைப்பாளிகளையும் கொண்ட மற்றொரு தொகுப் பையும் வெளியிடும் இலக்கில் முனைப்பு காட்டிய வேளையில் தான் மற்றொரு திணைக்களத்திற்கு இடமாற்றப்பட்டார்.

எனினும் மீண்டும் சந்தரப்பம் கிடைத்திருக்கிறது. அவரது பணிகள் தொடர வேண்டுமென வாழ்த்துக்களும் கலை, இலக்கியவாதிகள் எதிர்பார்க்கின்றன.

## ஆசிரியரைத் தாக்கிய குற்றச்சாட்டின் கீழ் கைதான மாணவர்கள் சீர்திருத்த பள்ளிக்கு

(வி.ரி.சகாதேவராஜா)

அட்டாளைச்சேனையில் இடம்பெற்ற ஆசிரியர் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பான சந்தேகத்திற்குரிய மாணவர்கள் இருவரையும் யாழ்ப்பாண மாவட்டம், அச்சுவேலியில் அமைந்துள்ள சிறுவர் சீர்திருத்த பாடசாலையில் இரு வாரங்கள் தடுத்து வைக்குமாறு அக்கரைப்பற்றுநீதிவான் நீதிமன்ற நீதிபதி எம் எச். மொக மட் ஹம்சா உத்தரவிட்டார்.

சந்தேகத்திற்குரிய இரு மாணவர்களையும் அக்கரைப்பற்று பொலிசார் கைது செய்து ஜூலை 27 அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

ஜூலை 26 அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியில் கற்பிக்கும் காரைதீவைச் சேர்ந்த திருநாவுக்கரசு .கோகுலவாசன் என்ற ஆசிரியர் மீது அதே கல்லூரியில்உயர் தரம் கற்கும் இரு மாணவர்கள் , ஒரு மாணவரின்சகோதரர்மற்றும் மற்றமாணவனின்பெற்றோர் சேர்ந்து தாக்கினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. பாடசாலை முடிவடைந்த நேரத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆசிரியரின் கண்ணில் காயம் ஏற்பட்டதில் அவர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். தாக்குதலில் ஆசிரியரின் மடிக்கணனி மோட்டார் வண்டி மூக்குக் கண்ணாடி என்பன சேதமடைந்துள்ளன.

பாடசாலையின் ஒழுக்க கோவையை செயல்படுத்துவதில் எற்பட்ட முரண்பாட்டில் இத்தாக்குல் நடைபெற்றதாகபாதிக்கப்பட்ட ஆசிரியர் தெரிவித்தார் அக்கரைப்பற்று பொலிஸார் சந்தேகத்திற்குரிய இரு மாணவர்களையும் கைதுசெய்து நீதிமன்றில் நிறுத்தினர்.

## மண்வெட்டியால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் கொலை

மண்வெட்டியால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கெபிதிகொல்லாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலவெவ பிரதேசத்தில்வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான நபர் அனுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில்சிகிச்சைபலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கட்டுவலகாலேவெவ, கெபிதிகொல்லாவ பிரதேசத்தில் வசிக்கும் 64 வயதுடையவர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்தவர் தனது வீட்டுக்கு அருகில் உள்ள நெல் ஆலை ஒன்றில் தங்கியிருந்தார் என்றும், தனிப்பட்ட தகராறு காரணமாக குறித்த பிரதேசத்தில் வசிக்கும் மேலும் இருவர் மண்வெட்டியால் உயிரிழந்தவரின் தலையில் தாக்கினர்என்றும்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து அப்பகுதி மக்கள் அவரை வைத்தியசாலையில் சேர்த்த போதிலும் அவர் சிகிச்சை பலனின்றிஉயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

தாக்குதல்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களுக்கு சொந்தமான இரண்டு கையடக்கத் தொலைபேசிகளைப்பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்கானமேலதிக விசாரணைகளை கெபிதிகொல்லேவபொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (02)

## குச்சவெளியில் 40 குடும்பங்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபாய் நிதி உதவி

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டம், குச்சவெளிபிரதேச செயலகத்திற்குறப்பட்ட கிராம சேவையாளர்கள் பிரிவில் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்ட 40 குடும்பங்களுக்கு ரூபா 15,000.00 பெறுமதியான பண வவுச்சர்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குச்சவெளி பிரதேச செயலக கலச்சார மண்டபத்தில் நடந்த நிகழ்வில் வைத்து பிரதேச செயலாளர், திட்டமிடல் உதவிப்பணிப்பளர் மற்றும் லீட்ஸ் நிறுவன உத்தியோகத்தர்களினால் வெள்ளிக்கிழமை இந்த வவுச்சர்கள் வழங்கி வைக்கப்பட்டன, இதனைக் கொண்டு உலர் உணவு பொருட்களை கொள்வனவு செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. இதற்கான நிதி அனுசரனை வெப்டிஸ்ட் சங்கத்தினரின் உதவியோடு லீட்ஸ் நிறுவனத்தால் வழங்கப்பட்டது. . நிகழ்வில் குச்சவெளிபிரதேசசெயலாளர் கே.குணநாதன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் நாசிக்,லீட்ஸ் நிறுவன உத்தியோகத்தர்ஏ.ஆர்.எம்.தஸ்லீம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மருத்துவர்கள் வீடு மீது மீண்டும் தாக்குதல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், கந்தர் மடத்திலுள்ள மருத்துவர் தம்பதிகளின்வீடுமீது இரண்டாவது தடவையாகவும் தாக்குதல்நடத்தப்பட்டுள்ளது. வீட்டுக்குள் நுழைந்த கும்பல், வீட்டையும் அங்கிருந்த தளபாடங்களை சேதப்படுத்தியும் தீயிட்டுக் கொழுத்தியும் அட்டகாசம் புரிந்துள்ளது.

மணல்தறைஒழுங்கை, கந்தர்மடம் இந்த வீட்டில் சில வாரங்களுக்கும் முன்னரும் அடையாளம் தெரியாதவர்கள் இதுபோன்று தாக்குதல்நடத்தியிருந்தனர். மீண்டும்நேற்று அதிகாலை சுமார் 2 மணியளவில் நுழைந்துமீண்டும்தாக்குதல் நடத்தியுள்ளனர். எனினும் இந்தத் தாக்குதல் ஏன், எதற்காக நடத்தப்படுகின்றது என்று தெளிவற்ற நிலையே காணப்படுகின்றது.

வேலியை பிரித்து உள் நுழைந்தகும்பல்பூட்டியிருந்த வீட்டினைஉடைத்துஉடமைகளைச் சேதமாக்கி தீயிட்டு எரித்துள்ளது.

காணி உரிமை தொடர்பான தகராற்றில் இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது..

பள்ளத்தில் பாய்ந்தது கார்

## ரஷ்ய இளைஞர் உட்பட இருவர் பரிதாபச் சாவு

கார்ஒன்றுபள்ளத்தில்வீழ்ந்துவிபத்துக்குள்ளானதில்இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில் ரஷ்ய இளைஞர் ஒருவரும், இலங்கைப் பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

இதன்போது காரில் பயணித்த மேலும் இருவர் காயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்த ரஷ்ய இளைஞர் 28 வயதுடையவர் எனவும், இலங்கைப் பெண் 51 வயதுடையவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (02)

## உழவியந்திரம் வீதியை விட்டு விலகி 150 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்து

### சாரதி பரிதாபகரமாக இறப்பு

பத்தனை மவுண்ட் வேர்ணன் மத்திய பிரிவு தோட்டத்தில்உழவுஇயந்திரம் வீதியை விட்டு விலகி சுமார் 150 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியதில்சாரதி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மவுண்ட் வேர்ணன் மத்திய பிரிவு தோட்டத்தில் நேற்று (சனிக்கிழமை) மதியம் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும்தெரியவருவதாவது-

கீழ்பிரிவிலிருந்துதோட்ட தொழிற்சாலைக்குதேயிலைக் கொழுந்தையும், விறகையும் ஏற்றிக்கொண்டு செல்லும் வழியில் மலையில் பாதையில் மத்திய பிரிவு பகுதியில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.



குறித்த சாரதி டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார் எனத் தரியவருகின்றது.

இவ்வாறு உயிரிழந்தவர் மவுண்ட்வேர்ணன் தோட்டத்தைச் சேர்ந்த சாரதியான எட்வட் (வயது - 48) 3 பிள்ளைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சாரதியின் சடலம் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு, பரிசோதனைகளின் பின் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்படும்எனவைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## சாய்ந்தமருதில் நாடக பயிற்சி





கலாசாரஅலுவலர்கள் திணைக்களத்தின் தொளஸ்மகபகவேலைத் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நாடகப் பயிற்சிப் பட்டறை சாய்ந்தமருதுமழ்ஹருஸ்ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச். சபீகாவின் ஒருங்கிணைப்பில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வளவாளர்களாக முன்னாள் கோட்டக் கல்விஅதிகாரியும்ஓய்வுபெற்ற அதிபருமான ஏ.பீர் முஹம்மட் மற்றும் கலைஞர் அஸ்வான் எஸ் மௌலானா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்சான், சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ். சுரேஷ் குமார், அபிவிருத்தி உத்தியோகத்தர் மாஜிதா, சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலய அதிபர் எம்.சி. றிப்கா அன்சார் உட்பட உயர்தர மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் சாய்ந்தமருது மழ்ஹருஸ்ஸம்ஸ்மகாவித்தியாலயத்தில் உயர்தரம் கற்கும் மாணவிகள் ஆர்வத்துடன் கலந்துகொண்டதுடன் இதன் போது வளவாளர்களால் நாடகப்பிரதிஎழுதுவது தொடர்பாகவும் நாடகம் எவ்வாறு நடிப்பது சம்பந்தமாகவும் செய்முறைவிளக்கங்களோடு மாணவிகளுக்குபயிற்சிகளும் கொடுக்கப்பட்டன.

பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்ட மாணவிகள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

## முழுநிலா நாள் கலை நிகழ்வுகள்

*யாழ்ப்பாண மாவட்டச் செயலகமும் பிரதேச செயலகங்களும் இணைந்து நடத்தும் முழு நிலா நாள் கலை நிகழ்வுகள் ஓகஸ்ட் 1 செவ்வாய்க்கிழமை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளன. யாழ். மாவட்டச் செயலர் ஆ.சிவபாலசுந்தரன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும். நல்லூர் வீணாலயா கலாமன்றத்தின் வீணை இசை, நவாலி தெற்கு சுருதி லயா நடனாலயத்தின் மயில் நடனம், சிறுப்பிட்டி சத்தியதாஸ் வில்லிசைக் குழுவினரின் 'தீர்க்கசுமங்கலி' வில்லிப்பாட்டு, யாழ்ப்பாண பிரதேசக் கலைஞர்களின் 'பண்டாரவன்னியன்' நாட்டுக்கூத்து ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.*

## நண்பன் போன்று தொலைபேசி அழைப்பெடுத்து வாள்வெட்டு

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம் கீரிமலை பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை,நண்பன்போன்று தொலைபேசி அழைப்பெடுத்து வாள் வெட்டு தாக்குதல்நடத்த முயற்சிக்கப்பட்டுள்ளது.கோண்டாவில்பகுதியை சேர்ந்த இளைஞன் ஒருவருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்ட ஒருவர், தன்னை நண்பனாக அறிமுகம் செய்து கொண்டு கீரிமலை பகுதிக்கு சந்திக்க வருமாறு கோரியுள்ளார்.

அதனை அடுத்து அப்பகுதிக்குஇளைஞன்சென்றபோது, அங்கு நின்ற கும்பல் ஒன்று இளைஞன் மீது வாள் வெட்டு தாக்குதல் நடத்த முயற்சித்துள்ளது.

அவ்வேளை இளைஞன் சுதாகரித்து தாக்குதலில் இருந்து,மோட்டார்சைக்கிளை கைவிட்டு தப்பி ஓடியுள்ளார். இதனை அவதானித்த ஊரவர்கள் ஒன்று கூடியதால் குறித்தமோட்டார்சைக்கிளை எடுத்து அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் இளைஞன் முறைப்பாடு செய்ததை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.07.2023இல் வெளியிடப்பெற்றது.